Registered as Newspaper

**முச்சந்தி முரளி**



அடிக்கிற கைதான்
அணைக்கும்
என்டுறது
விக்கி-டெனீஸ்
விசயத்தில நல்லாப்
பொருந்துதுங்கோ


# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :29 புரட்டாதி 01 ஆம் நாள் வியாழக்கிழமை 17 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


# '13' ஒழிக்கமாட்டோம் பலப்படுத்துவோம்



## அமைச்சர்கள் யாழில் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தையோ, மாகாணசபை முறைமையையோ அரசு ஒருபோதும் இல்லாதொழிக்காது. அதனைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே முன்னெடுக்கும். அரசிலுள்ள ஒரு சிலர் சொல்லும் கருத்துக்களை அரசின் கொள்கை முடிவாகக் கருத முடியாது. இவ்வாறு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தனர்.** 18 ▶

## மாகாணசபை முறைமையை பாதுகாக்க ஓரணியில் திரள்க !

### தமிழ் கட்சிகளுக்கு விக்கிரமபாகு அழைப்பு



கொழும்பு, செப். 17
தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரக் கூடாது என்ற நயவஞ்சக நோக்கிலேயே மாகாணசபை முறைமையை 18 ▶

## வெடுக்குநாறி ஆலயத்தில் வழிபாட்டுக்கு அனுமதி

### பொலிஸாரின் தடை உத்தரவை நீதிமன்றம் அடியோடு நிராகரிப்பு

வவுனியா, செப். 17
ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் திருவிழாவை நடாத்துவதற்கு பொலிஸாரால் கோரப்பட்ட தடை உத்தரவை வவுனியா நீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.
வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று பூசைகள் செய்வதனை தடுக்கும் விதமாக குற்றவியல் சட்டக் கோவையின் 106ஆவது பிரிவின் கீழ் தடை உத்தரவை வவுனியா 18 ▶

## டெனீஸ் - விக்கி இணக்கப்பாடு!

### வழக்குகள் வாபஸ்



கொழும்பு, செப். 17
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த நீதிமன்ற அவமதிப்பு இருதரப்பு இணக்கப்பாட்டின் அடிப்படை 19 ▶

## சிவாஜி விடுதலை



யாழ்ப்பாணம், செப். 17
நீதிமன்றத் தடை உத்தரவையும் மீறி தியாக தீபம் திலீபனுக்கு நினைவேந்தல் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம். 19 ▶

## யாழ். வாசிக்கு 3.7கோடி ரூபா

### அதிர்ஷ்ட லாபச்சீட்டில் அடித்தது ஜக்பொட்

யாழ், செப். 17
யாழ்ப்பாணம் சங்கானையைச் சேர்ந்த ஒருவருக்கு 3.7 கோடி ரூபா அதிர்ஷ்டமாகக் கிடைத்துள்ளது.
தேசிய லொத்தர் சபையில் நேற்று முன்தினம் 19 ▶

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு உறுப்பினர்களின் தொகை 5

கொழும்பு, செப். 17
தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3 இலிருந்து ஐந்தாக அதிகரிக்குமாறு, '20' ஆவது திருத்தச்சட்டவரைபு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு பரிந்துரை முன்வைத்துள்ளது. 18 ▶

## 5 மாதங்களின் பின்னர் அம்பன் புயல் இழப்பீடு

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப். 17
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அம்பன் புயலினால் ஏற்பட்ட விவசாய அழிவுக்கான இழப்பீடு வழங்க 5 மாதங்களின் பின்பு நேற்றைய 18 ▶

## '20' க்கான பொறுப்பை ஏற்றார் கோத்தாபய!

கொழும்பு, செப். 17
அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைபுக்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்கின்றேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கூறினார் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவைக்கூட்டம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நேற்று நடைபெற்றது.
அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே '20' க்கான பொறுப்பை தான் ஏற்கின்றேன் என்று ஜனாதிபதி கூறினார்.
அத்துடன், புதியதொரு அரசமைப்பு உருவாக்கப்படும் எனவும், '20' என்பதே தற்காலிக ஏற்பாடு எனவும் ஜனாதிபதி கூறினார் என்று மஹிந்த அமரவீர தெரிவித்தார்.
அரசமைப்பின் '20' ஆவது திருத்தச்சட்டமூலத்தின் ஸ்தாபகர் யார், அதற்கான பொறுப்பை யார் 19 ▶

## ஐ.நாவுக்கு எதிராக அரசு போர்க்கொடி

### '20' குறித்த ஆணையாளரின் கருத்து தேவையற்றது எனவும் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 17
'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள 18 ▶

# மன்னாரில் 2 வாரங்களுக்கு இணைந்த நேர அட்டவணை

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

**மன்னார், செப் 17**
**மன்னாரில் பஸ் தரிப்பிட பிரச்சினைக்கு இரண்டு வாரங்களின் பின்னரே தீர்வு எட்டப்படும். அதனால் இரண்டு வாரங்களுக்கும் இணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக போக்குவரத்து சேவையை நடைமுறைப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டச் செயலர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

மன்னார் நகர சபையின் கீழ் உள்ள புதிய பஸ் தரிப்பிடத்தில் மன்னார் மாவட்ட தனியார் பஸ் சேவை மற்றும் இலங்கை அரச போக்குவரத்துச் சேவைகள் இணைந்த சேவையாக மேற்கொள்வதில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் நிலவிவந்தன.

இந்தநிலையில் வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் விசேட கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது, தொடர்சியான முரண்பாடுகள் காரணமாகவும் மனக்கசப்புக்கள் காரணமாகவும் இணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக புதிய பஸ் நிலையத்திலிருந்து சேவையில் ஈடுபட இலங்கை அரச போக்குவரத்துச் சேவை பிரதிநிதிகள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

புதிய பஸ் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டபோதும், மன்னாரில் அரச தனியார் போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்தும் தனித்தனியாகவே இடம்பெற்று வருகின்றன.

பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டபோதும் ஒரே பஸ் தரிப்பிடத்தில் அரச தனியார் பேருந்து தரப்பினர் இணைந்த சேவையை மேற்கொள்ள மறுப்பு தெரிவித்து வந்தனர்.

இந்தநிலையில், மன்னார் மாவட்டச் செயலர் மற்றும் அதிகாரிகள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இணைந்த சேவையை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இரண்டு வாரங்களுக்குள் சுமூக முறையில் ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக போக்குவரத்து சேவையை மேற்கொள்ள கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக எதிர்வரும் இரண்டு வராங்களுக்கு அரச தனியார் போக்குவரத்துச் சேவைகள் புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து ஒன்றிணைந்த நேர அட்டவணைக்கு அமைவாக இணைந்த போக்குவரத்து சேவையாக நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இதன்போது ஏற்படுகின்ற பிரச்சினைகள், குறைபாடுகளை இரண்டு வராங்களுக்குள் நிவர்த்திசெய்து புதிய நேர அட்டவணையை தயாரித்து போக்குவரத்துச் சேவையை தொடர்ந்து மேற்கொள்வது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துச் சபையின் தலைவரின் தலைமையில் இரண்டு வாரங்களுக்குள் புதிய நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. அதுவரைக்கும் பழைய நேர அட்டவணைக்கு அமைவாக அரச தனியார் போக்குவரத்து சேவைகள் ஒன்றிணைந்த சேவையாக முன்னெடுப்பது என்றும் சுமூக முடிவு எடுக்கப்பட்டது.

(த213,56)

## விபத்துக்குள்ளானவர் 2 மாதங்களால் சாவு

யாழ்ப்பாணம், செப். 17
கடந்த இரண்டு மாதங்களின் முன்னர் தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் காயமடைந்த முதியவர் நேற்று உயிரிழந்தார்.

செல்லையா சுந்தரலிங்கம் (வயது 62) என்ற நபரே உயிரிழந்தவராவார். இவர் கடந்த இரு மாதங்களுக்கு தெல்லிப்பழை பகுதியில் சென்றபோது வாகனம் ஒன்றுடன் விபத்துக்கு உட்பட்டுள்ளார். இதையடுத்து மயங்கமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார். பின்னர் மயக்கம் தெளியாமல் வீட்டில் வைத்துப் பராமரிக்கப்பட்டார். நேற்று அவரின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து அவர் உயிரிழந்தார். இறப்புத் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

(ம-26)



## முரண்பாடுகளைக் களைய வவுனியாவில் கலந்தாய்வு

வவுனியா, செப்.17
சமகால மத, இன முரண்பாடுகளை சமாதானமான முறையில் களைவது மற்றும் அதற்கு அரசியல் தலைவர்களுடன் இணைந்து நடவடிக்கை எடுப்பது தொடர்பான கலந்துரையாடல் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

சிறிய இன, மத முரண்பாடுகளை வளரவிடாது ஆரம்பத்திலேயே களைவது மற்றும் அரசியல்வாதிகள் மதம் சார்ந்த விடயங்களை கையிலெடுத்து அரசியல் செய்வதை தடுப்பது போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன. தொடர்ந்து சர்வமதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைமைகள் சந்திப்புக்களை மேற்கொண்டு இன,மத நல்லிணக்கத்தை உறுதிசெய்வதற்கான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், கெ.திலீபன், காதர் மஸ்தான், மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(த-110)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பளையில்

பளை, செப். 17
பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் ஆகியோரின் தலைமையில் இது நடைபெறும் என்று பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(த-9)

## மதத்தலைவர்கள் பிரதமருடன் பேச்சு

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் அலரி மாளிகையில் மதத் தலைவர்களும் அரச அதிகாரிகளும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நேற்றுக் கலந்துரையாடினர்.

கிழக்கு மாகாணத்தில் திருக்கோவில், கல்முனை, அம்பாறை போன்ற பிரதேசங்களின் பாடசாலை, மருத்துவமனை, போக்குவரத்து, கல்வி ஆகிய துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் பிற விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

(த)

# விவசாயிகளின் காணிகளை விடுவிக்க உரிய நடவடிக்கை

## உறுதியளித்தார் ராஜாங்க அமைச்சர்



வவுனியா, செப். 17
வவுனியாவில் நிரந்தர காடுகள் தவிர்ந்த விவசாயிகளின் காணிகளை வனவளத்திணைக்களம்சுவீகரித்திருந்தால், அதனை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்கின்றேன் என்று நெல் மற்றும் தானியங்கள், விதை உற்பத்தி, உயர் தொழில்நுட்ப வேளாண்மை ராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச உறுதியளித்தார்.

'சுபீட்சத்தின் நோக்கில் விவசாய மறுமலர்ச்சி' என்ற திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளுடனான கலந்துரையாடல் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

அதில் முதன்மை அதிதியாக இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ச கலந்துகொண்டார். அவருடன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமதிபால, விவசாயத் திணைக்கள அதிகாரிகள், கமநலசேவை அதிகாரிகள் மற்றும் விவசாயிகளும் கலந்துகொண்டனர்.

வவுனியாவில் வனவளத்திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் காணி பற்றிய விடயம், உரமானியம், நியாயமான விலையில் விதைகளை பெற்றுக் கொள்ளல், யானைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் மற்றும் பிரதேசரீதியாக நெற்களஞ்சியசாலையை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் அமைச்சரிடம் எடுத்துக்கூறப்பட்டன. அதன்போதே மேற்கண்டவாறு இராஜாங்க அமைச்சர் கூறினார்.

(த-110)

## மன்னாரில் திருவள்ளுவர் விழா

தலைமன்னார், செப். 17
வடக்கு மாகாண பண்பாட்டு திணைக்களத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்ட செயலகம் நடத்தும் திருவள்ளுவர் விழா மன்னார் மாவட்ட செயலகத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9.30.மணிக்கு நடைபெறவுள்ளது.

(த-60)

# டெனீஸூடனான வழக்கு ஒரு துன்பியல் சம்பவம்

## மனம் திறந்தார் விக்கி



**கொழும்பு, செப்ரெம்பர் 17**

**'டெனீஸ்வரனுடனான வழக்கு விவகாரம் ஒரு துன்பியல் சம்பவம். தரப்பாருக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமையால் இதுவரையில் இவ்விடயம் தாமதிக்கப்பட்டு வந்துள்ளது' இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

விக்னேஸ்வரனுக்கு எதிராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுத்திருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நேற்றுப் பிற்பகல் முடிவுக்கு வந்த பின்னர் நீதிமன்ற வளாகத்தில் காத்திருந்த ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'வடக்கு மாகாண சபையில் தொடங்கிய டெனீஸ்வரனுடனான இந்தப் பிரச்சினை நீதிமன்றம் வரை வந்தமை குறித்து என்ன சொல்கின்றீர்கள்?' என்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இது ஒரு துன்பியல் சம்பவம். அதாவது, தரப்பாருக்கு இடையே புரிந்துணர்வு இல்லாமையால் இதுவரையில் இவ்விடயம் தாமதிக்கப்பட்டு வந்துள்ளது.

அண்மையில் நான் கதிர்காமத்தில் இருந்தபோது, டெனீஸ்வரன் தொலைபேசியூடாக என்னை அழைத்தார். அப்போது நான் அவருடன் பேசியபோது ஒரு விடயத்தை அறிந்துகொண்டேன். தன்னைக் குற்றவாளியாக நினைத்து அமைச்சர் குழாமிலிருந்து நான் அவரை வெளியேற்றியதாக அவர் நினைத்திருந்தார். ஆனால், அவரை வெளியேற்றியமைக்கான காரணம் அவர் சம்பந்தமாக முறைப்பாடு செய்த ஒருவர் அமைச்சரவையில் அப்போது இருந்தார். குற்றம் சுமத்தி யவரையும், குற்றம் சுமத்தப்பட்டவரையும் அமைச்சரவையில் வைத்திருத்தல் உசிதம் இல்லை என்ற காரணத்தால்தான் நான் அவரைப் பதவியிலிருந்து நீக்கினேன் என்ற விடயத்தை அவருக்கு அறியப்படுத்தினேன்.

அதன்பின்னர் பல சம்பவங்கள் நடைபெற்று இன்று (நேற்று) வழக்கை அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார். அதற்கு ஈடாக நாங்கள் உயர்நீதிமன்ற மேன்முறையீட்டு மனுவைக் கைவாங்குவதாக மன்றில் தெரிவித்தோம். இதனடிப்படையில் நீதிமன்றம் மன்றை அவமதித்தமை சம்பந்தமான வழக்கை கைவாங்க அனுமதியளித்தது' என்றார். (ம22)

# திருத்தப்படுகிறது 20ஆவது வரைவு

## உறுதிப்படுத்தினார் கம்மன்பில

கொழும்பு, செப். 17

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் நகல் வடிவில் காணப்பட்ட தவறுகளைச் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

'தவறுகள் இழைப்பது இயல்பு. அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதே முக்கியம்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதேவேளை, பாரிய இழப்புகளைச் சந்தித்துள்ள ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் போன்ற நிறுவனங்களைக் கணக்காய்வு செய்ய வேண்டியிருக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு முன்னெடுக்கும் கணக்காய்வு நடவடிக்கையின் கீழ் அவ்வாறான நிறுவனங்களைக் கொண்டுவர வேண்டும் என நாங்கள் அனைவரும் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்த நகலை மீளாய்வு செய்த குழுவின் பரிந்துரைகளை ஜனாதிபதியும் பிரதமரும் கருத்திற்கொள்வார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ம22)



# கோத்தாபய உயிரை காப்பாற்றியது நானே

## நாமல் குமார கூறுகிறார்

கொழும்பு, செப்.17
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் உயிரைக் காப்பாற்றியவன் நானே என்று நாமல்குமார தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;
கடந்த அரசின் காலத்தில் தற்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைக் கொலை செய்யும் திட்டத்தில் இருந்து அவரை நானே காப்பாற்றினேன்.
முன்னர் நான் வெளியிட்ட தகவல்கள் காரணமாக தற்போது கோத்தாபய ராஜபக்ச நாட்டின் ஜனாதிபதியாக உள்ளார். அது தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகின்றேன்.
கடந்த அரசின் காலத்தில் அரச பாதுகாப்பு மிகவும் பலவீனமாக இருந்தது. அதனாலேயே ஜனாதிபதியை கொலை செய்யும் சதித் திட்டத்தைக்கூட தன்னால் வெளியிட முடிந்தது. புதிய அரசின் கீழ் குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாகத் திருப்தியடைய முடியும்.
ஆனாலும் மிக முக்கிய தகவலை வெளியிட்ட எனக்கு இதுவரை பாதுகாப்பு கிடைக்கவில்லை. இலங்கையின் சட்டத்தில் உள்ள குறைபாடுகளே இதற்கு காரணம்.-என்றார்.
(எ-இ)

# திலீபனின் வாரத்தை காரணம் காட்டி உண்ணாவிரத போராட்டத்துக்கு தடை

## அனுமதி வழங்கிய பொலிஸாரே மீளப் பெற்றனர்

**வடமராட்சி, செப்.17**
**சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைளைத் தடைசெய்யுமாறு கோரி யாழ்ப்பாணம், வடமராட்சி, கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நேற்று முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்த உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. போராட்டத்துக்காக வழங்கிய அனுமதியை, திலீபனின் நினைவு வாரத்தைக் காரணம் காட்டி மீளப் பெற்றனர் பொலிஸார்.**

இது தொடர்பில் சமாசத்தின் தலைவர் க.சண்முகநாதன் தெரிவித்ததாவது;
வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட கடற்றொழிலாளர்கள் சங்கங்களுக்கிடையில் கடந்த 11/09/2020 இடம்பெற்ற சந்திப்பின் போது வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் சட்டவிரோதமான தொழில் நடவடிக்கைகளை உடன் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கும் வகையில், சமாசத்தினால் அறவழிப்போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த முடிவுக்கு அமைவாக நேற்று புதன்கிழமை தொடக்கம் உணவுதவிர்ப்புப் போராட்டம் ஒன்று வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் ஆரம்பிக்கப்படவிருந்தது. அதற்கான அனுமதியும் ஏற்கனவே பளை பொலிஸாரிடம் பெறப்பட்டது. ஆனால் நேற்றுமுன்தினம் சமாசத்தின் தலைவரை திடீரென பளை பொலிஸ் நிலையத்திற்கு வரவழைத்த பொலிஸார் ஏற்கனவே உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வழங்கிய அனுமதிப் பத்திரத்தை மீளப்பெற்றுக் கொண்டதுடன் போராட்டத்தை நடத்த வேண்டாம் எனவும் கோரினர். இப்போது உள்ள நிலவரப்படி, திலீபனின் நினைவுக்காலம் என்பதால் அந்தக் காலத்தில் இப்படியான நிகழ்வுகளைத் தவிர்த்து எதிர்வரும் 26 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த நிகழ்வை நடத்துமாறு பொலிஸார் கோரினர் என்றார்.
வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சுருக்குவலை, கடல் அட்டைபிடித்தல் (டைவிங் மூலம் சிலிண்டருடன்) டைனமெற் அடித்து மீன் பிடித்தல் (வெடிகுண்டு) கடலில் குழைவைத்து கணவாய் பிடித்தல், உழவியந்திரம் மூலம் கரைவலை இழுத்தல் போன்றவற்றைத் தடைசெய்யுமாறும், சட்டவிரோதமான முறையில் கரையில் தங்கிநின்று தொழில்களில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களை உடன் வெளியேற்றுமாறும் கோரியே இநத உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படவிருந்தது. (ப-70)

# காணி பகிர்வுக்கு மக்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், செப்.17
கீரிமலை நகுலேஸ்வரம் ஜே/226 கிராம அலுவலர் பிரிவிலுள்ள புதிய கொலணி பகுதியில் உள்ள பொதுக்காணி ஒன்றை வேறு பகுதியைச் சேர்ந்த காணி இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
2013 ஆம் ஆண்டு மீளக்குடியமரும்போது இந்தக் காணியில் பொது மண்டபம் ஒன்று கட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கடந்த 3 தினங்களுக்கு முன்னர் பக்கோ இயந்திரம் கொண்டு இந்தக் காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
நேற்றுக் காலை இந்தக் காணியை வேறு பகுதியில் வசிக்கும் காணி அற்றவர்களுக்கு அளவீடு செய்யும் செயற்பாட்டை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டமையால் அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது
எமது பிரதேசத்திலே 28க்கும் அதிகமான குடும்பங்கள் சொந்தக் காணி இன்றி உள்ளனர். அவ்வாறு இருக்கையில் வெளி இடத்தில் இருந்து வருபவர்களுக்கு எமது பகுதியில் காணி வழங்குவது தவறான செயற்பாடு. இந்தக் காணியில் எமது பிரதேச மக்களை குடியமர்த்தினால் எமக்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. மாறாக காணி தேவைப்படும் எமது கிராமத்தவரை நிராகரித்து வேறு இடத்தவருக்கு வழங்குவதே எமது எதிர்ப்புக்கு காரணம் - என்றார். (எ-இ)

# சமுர்த்தி பயனாளிகள் இருவருக்கு நேற்று தலா ரூபா 2 லட்சம்

சாவகச்சேரி, செப்.17
கடந்த ஏப்ரல், மே மாதங்களில் இடம்பெற்ற குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட கைதடி சமுர்த்திச் சங்கத்தைச் சேர்ந்த இரு பயனாளிகளுக்கு தலா இரண்டு லட்சம் ரூபா நேற்று மாவட்டச் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.
இலங்கையில் உள்ள அனைத்து பிரதேச செயலக. பிரிவுகளில் இயங்கும் சமுர்த்திச் சங்கங்களில் மாதாந்த நிவாரணம் பெறும் பயனாளிகளிடம் தலா 50 ரூபா அறவிட்டு மாதாந்தம் குலுக்கல் மூலம் பிரதேசத்துக்கு ஒரு பயனாளி தெரிவு செய்யப்படுகிறார். காணி வாங்க ,வீடு அமைக்க,வீடு புதுப்பிக்க மற்றும் வருமானம் தரக்கூடிய தொழிலை மேற்கொள்ள இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும்.
இரண்டு லட்சம் ரூபா வீதம் இந்த நிதி வழங்கப்பட்டுவருகிறது, குலுக்கல் மூலம் கடந்த ஜூலை வரை தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின், விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த ஏப்ரல் ,மே மாதங்களுக்குரிய குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கே நேற்று இந்த நிதி வழங்கப்பட்டது.
(ஐ-9,159)

# இந்தியாவில் இருந்து வந்த இருவர் மன்னாரில் கைது

மன்னார், செப்.17
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு சட்ட விரோதமாக கடல் மார்க்கமாக வந்தார்கள் என நம்பப்படுகின்ற இரண்டு பேர் கடற்படையினரால் நேற்று தலைமன்னார் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட அவர்கள் மன்னார் பகுதிக்கு அழைத்து வரப்பட்டு பள்ளிமுனைப் பகுதியில் உள்ள அவர்களுடைய வீடுகளில் தனிமைப்படுத்தப்பட உள்ளனர்.
இவர்களுக்கான பி.சி.ஆர்.பரிசோதனைகள் ஒரு வாரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகளுக்கு அமைவாக அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானிப்போம் என மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
(ப-56)

# பதுக்கிவைக்கப்பட்டிருந்த சுருக்கு வலைகள் மீட்பு





மட்டக்களப்பு மாவட்டம் தேத்தாதீவு கடற்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சுருக்கு வலைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன என கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் ருக்ஷன் குரூஸ் தெரிவித்தார்.
அந்தப் பகுதிக்குரிய கடற்றொழில் பரிசோதகருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் வலைகள் மீட்கப்பட்டுள்ளன.
இதன்போது அனுமதியற்ற ஒருதொகுதி சுருக்கு வலைகளும், ஓர் இயந்திரப்படகும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட சுருக்கு வலைகள் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியுடையன எனவும், அவற்றை நீதி மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் ருக்ஷன் குரூஸ் மேலும் தெரிவித்தார்.
(வ-46)

# வரவேற்பு நிகழ்வு

தெல்லிப்பழை.செப்.17
தெல்லிப்பழை துர்க்காபுரம் (ஜே/229) கிராமத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள கிராம அலுவலரை வரவேற்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிராம செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## சிவனும் பயங்கரவாதியா?

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் பொலிஸாரால் கோரப்பட்ட தடையுத்தரவு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதனால் தடைகளைத் தகர்த்து இன்று உற்சவம் காண்கின்றது வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம்.

இந்தத் திருவிழாவை நிறுத்துமாறு தொல்லியல் திணைக்களத்தால் பொலிஸாருக்கு அவசரக் கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தின் அடிப்படையிலேயே தாம் உற்சவத்தைத் தடுத்து நிறுத்துமாறு கோருகின்றோம் என்று பொலிஸார் மன்றுரைத்திருந்தனர். இதனால் இம்முறைவெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வர ஆலயத் திருவிழா இடைநிறுத்தப்படும் நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்போது நீதிமன்றம் தடை நீக்கியதால் வழமைபோல ஆதிலிங்கேஸ்வரர் திருவிழாக் காணவுள்ளார்.

வெடுக்குநாறிமலையில் புதிய கட்டுமானங்கள் அமைக்க மட்டுமே தடையுண்டு. மற்றும்படி அங்குசென்று வழிபாடுகளை மேற்கொள்ள எந்தத் தடையும் இல்லை. இதை நீதிமன்றம் ஏற்கனவே தெரிவித்துவிட்டது. எனினும் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை தமிழர்களிடம் இருந்து பறித்தெடுத்துவிட வேண்டும் என்பதில் தொல்பொருள் திணைக்களம் அலாதி பிரியம் கொண்டுள்ளது. கடந்த சில வருடங்களாகவே அதற்கான முயற்சிகளில் தொல்பொருள் திணைக்களம் கடும் முனைப்புடன் ஈடுபட்டு வந்தது. விழா வெடுக்கும் தரப்பினருக்கு பெரும் சிரமத்தையும் தடைகளையும் தொடர்ச்சியாகக் கொடுத்து வருகின்றது.

தொல்பொருள் சார்ந்த இடங்கள் அடையாளப்படுத்தப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும், அதன் பழமையும் பெருமையும் தக்கவைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை ஆனால் பாதுகாக்கப்பட வேண்டிய பல தொல்பொருள்கள் நம் கண்முன்னே பல இடங்களிலும் அழிவடைந்து செல்கின்றன. யாழ்ப்பாணத்தில் ஏராளமான உதாரணங்களை இதற்குக் குறிப்பிடலாம். அவ்வாறு பாதுகாப்பற்ற நிலையில் தேடப்படுவாரற்று உரிய பராமரிப்பின்றி எண்ணற்ற தொல்பொருள்கள் அழிந்து செல்கையில் வெடுக்குநாறிமலையில் மட்டும் தொல்பொருள் திணைக்களம் தனது கழுகுப் பார்வையை செலுத்திக் கொண்டிருப்பது எதற்காக?. அங்கிருக்கக்கூடிய ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கும் பௌத்த சாயம் பூசி அதைப் பறித்தெடுக்கும் முயற்சியின் சூழ்ச்சிதான் இதுவா என்று தமிழர்கள் அச்சம் கொண்டுள்ளனர். அது நியாயமான அச்சமே.

வெடுக்குநாறிமலை வவுனியாவின் எல்லைக் கிராமம். சிங்கள கிராமங்கள் பலவற்றுடன் மிகக் குறுகிய இடைவெளியையே அது கொண்டுள்ளது. எனவே சிங்களப் பரம்பலுக்கு வெடுக்குநாறிமலையை இரையாக்குவது மிகச் சுலபம். இதனால் தானோ என்னமோ வெடுக்குநாறிமலை தற்போது அதிகம் இலக்குவைக்கப்படுகின்றது.

திலீபனை அஞ்சலிக்கவும், முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நினைவேந்தவும் பேரினவாதம் தடைப் போடுகின்றது. 'பயங்கரவாதிகளை அல்லது பயங்கரவாதம் சார் விடயங்களை அஞ்சலிக்கத் தடை' என்று இதற்கு விளக்கம் கற்பிக்கப்படுகின்றது. பேரினவாதத்தின் பார்வையில் புலிகளையும் போரில் கொல்லப்பட்டோரையும் அஞ்சலிப்பது தவறாக இருக்கலாம். ஆனால் அதே அளவுகோலோடு ஆதிலிங்கேஸ்வரருக்கும் தடைபோடுவதன் சூட்சுமம் இன்னமும் புரியாதபுதிர். ஒருவேளை பேரினவாதத்தின் பார்வையில் சிவனும் பயங்கரவாதியோ என்னமோ..!

# குழுநிலை விவாதத்தில் வரைவு திருத்தப்படும்

### 20 தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர் சுசில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 17

**அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு சர்வாதிகார ஆட்சிக்கு வழிகோலாது என்று இராஜாங்க அமைச்சரும், 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது 20 இல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் எதிரணி உறுப்பினர்கள் தவறான கண்ணோட்டத்துடன் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர். மேற்படி சட்ட வரைவின் ஊடாக தனிநபர் ஒருவரிடம் அதிகாரங்கள் குவிக்கப்படவில்லை. மாறாக நாட்டை முன்நோக்கி கொண்டுசெல்வதற்காக நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துவதற்கான அதிகாரங்களே வழங்கப்பட்டுள்ளன. இது எதேச்சாதிகாரத்துக்கு வழிகோலாது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் 30 அமைச்சர்களை நியமிக்கலாம் என்றபோதிலும் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் 16 பேரையே நியமித்தார். தற்போதும் 25 பேர்தான் உள்ளனர். கொரோனா கட்டுப்படுத்தப்பட்டது. போதைப்பொருள் ஒழிக்கப்பட்டு வருகின்றது. எனவே, ஒழுக்கவிழுமியங்களுடன் செயற்படும் ஜனாதிபதி எசேச்சாதிகாரத்தை விரும்பமாட்டார்.

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதற்கான பணி ஆரம்பமாகியுள்ளது. நிபுணர்குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. என்றும் இர்ராஜாங்க அமைச்சர் கூறினார்.

(ஔ,5,44)

# ரயில் பணியாளருக்கு கொரோனா இல்லை

### மன்னார்.சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், செப்.17

மன்னாரில் தனிமைப்படுத்தப்பட்ட ரயில் பணியாளர்கள் மூவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை என பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் மன்னாரில் இருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா பெரியகாடு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பி வந்து மன்னார் சௌத்பார் ரயில்நிலையப் பகுதியில் மறைந்து இருந்த வரைப் பிடிப்பதற்கு உதவிய ரயில் நிலையப் பணியாளர்கள் மூன்று பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. மூன்று பணியாளர்களுக்கும் கொரோனாத் தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவு தெரிவிக்கின்றது. மூன்று பணியாளர்களையும் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பிவிட்டு ரயில் நிலையத்தைத் திறக்க முடியுமா? என்பது தொடர்பாக நாங்கள் ஆராய்ந்து வருகின்றோம் - என்றார்.

(ப-56)

## கதிரியக்கவியலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, செப்.17

அரச கதிரியக்கவியலாளர்கள் நேற்றுமுன்தினம் ஒரு நாள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது என்று அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்களின் சங்கத்தின் தலைமை செயலாளர் தர்ம கீர்த்தி தெரிவித்துள்ளார்.

சிறுவர் வைத்தியசாலைகள் மற்றும் மகப்பேற்று வைத்தியசாலைகளில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-இ)

# முள்ளிவாய்க்காலில் புலிகளின் ஆயுதங்கள் பெருமளவில் மீட்பு

முல்லைத்தீவு, செப். 17


போரின் இறுதிக்கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட அதிநவீன மிதிவெடிகள் உள்ளிட்ட ஒரு தொகுதி வெடிபொருள்கள் முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன.

முள்ளியவாய்க்கால் கிழக்கு பகுதியில் நெல் குத்தும் ஆலை விரிவாக்கத்துக்காககாணியை கனரக இயந்திரம் மூலம் துப்புரவு செய்த போது வெடிபொருள்கள் இருக்கின்றமை தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து புதைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களை மீட்டனர்.


புலிகளால் தயாரிக்கப்பட்ட இறப்பர் குழாயில் செய்யப்பட்ட நில கண்ணிவெடிகள் பல மீட்கப்பட்டுள்ளன. எடுக்கப்பட்ட வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப் படையினரிடம் தகர்த்து அழிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

81 மில்லி மீற்றர் எறிகணைகள் 7, கிளைமோர் குண்டு 1, 40 மில்லிமீற்றர் எறிகணை 1, ரி.என்.ரி வகை வெடிபொருள்கள் ஒரு தொகுதி, சி4 வகை வெடிபொருள்கள் ஒருதொகுதி மற்றும் அதற்கான வெடிப்பிகள் அடங்கிய வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. (ஔ,5,19,246)




# ஜப்பானின் புதிய பிரதமருக்கு மஹிந்த ருவிட்டரில் வாழ்த்து

கொழும்பு,செப்.17
ஜப்பானின் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் யோஷிஹைட் சுகாவுடன் இணைந்து பணியாற்ற இலங்கை தயாராக உள்ளது என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
ஜப்பானின் புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்பட்ட யோஷிஹைட் சுகாக்கு வாழ்த்து தெரிவித்து அவரது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த தங்களுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருக்கின்றேன் என்றும் மஹிந்த ராஜபக்ச அதில் குறிப்பிட்டிருக்கிறார்.
நேற்று புதன்கிழமை நாடாளுமன்ற வாக்கெடுப்பில் ஜப்பானின் புதிய பிரதமராக யோஷிஹைட் சுகா தேர்ந்தெடுக்கப்பட்டார். (ஐ)



# கனேடியத் தூதுவரிடம் மூன்று கோரிக்கைகள்

## முன்வைத்தார் சாணக்கியன்

மட்டக்களப்பு, செப். 17
இலங்கைக்கான கனேடியத் தூதுவரை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.
மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியிலுள்ள அவரது அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தொடர்பான சர்வதேச மேற்பார்வையை மேலும் வலுப்படுத்த வேண்டும்.
இலங்கை அரசின் புதிய அரசமைப்பில் தமிழர்களின் பிரச்சனை களைக் கருத்திற் கொண்டு அவற்றுக்கான தீர்வுகள் உள்வாங்கப்படுவதற்காக சர்வேதேச ரீதியிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும்.
எமது பிரதேசங்களில் காணப்படும் பெண் தலைமை தாங்கும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.
பெண் தலைமை தாங்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்ட ஆவணங்களும் இதன் போது இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-5,22)

# ஊடகவியலாளர் துன்புறுத்தல்: ஐ.நா. அறிக்கையாளர் கவலை

கொழும்பு, செப்.17
**சிரேஷ்ட ஊடகவியலாளர் தரிஷா பஸ்டியன் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்குஉள்ளாகின்றார் றிக்என்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர்கள் ஐவர் கவலை வெளியிட்டுள்ளனர்.**

இந்த விடயம் தொடர்பாக இலங்கை அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்கள், தரிஷா பஸ்டியன் தனது எழுத்துக்களுக்காகவும் இலங்கையில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்காகவும் இலக்கு வைக்கப்படுகின்றார் என தெரிவித்துள்ளனர்.
தரிஷா பஸ்டியன் தொடர்ந்தும் துன்புறுத்தலுக்கு உள்ளாவதும், அவரது கணினி கைப்பற்றப்பட்டு அவரது தொலைபேசி ஆவணங்கள் பகிரங்கப்படுத்தப்படுவதும் அவரது தகவல் மூலங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம் என ஐ.நா. அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
அவர் ஓர் அனுபவமிக்க ஊடகவியலாளர் மற்றும் மனித உரிமை பாதுகாவலர் ஆவார். அவர் முன்னர் சண்டே ஒப்சேர்வரின் தலைமை ஆசிரியராகவும், நியூயோர்க் டைம்ஸின் நிருபராகவும் பணியாற்றியுள்ளார்.
சட்டவிரோத கொலைகள், அரசியல் ஊழல் மற்றும் தண்டனையற்ற பிரச்சினைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் உள்ளிட்ட இலங்கையில் கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அவர் எழுதியுள்ளார்.
2009 ஆம் ஆண்டில் தி சண்டே லீடர் பத்திரிக்கையில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ல்சந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் 2008-2009 காலப்பகுதியில் இலங்கை கடற்படை ஊழியர்களால் 11 இளைஞர்களைக் கடத்தி கொலை செய்தமை பற்றியும் அவர் செய்தி வெளியிட்டுள்ளார்.
அவருக்கு நடந்துள்ள சம்பவங்களால், பொதுமக்கள் நலன் மற்றும் மனித உரிமை தொடர்பான விடயங்கள் குறித்து எழுதுவதை ஏனைய ஊடகவியலாளர் கைவிடலாம் எனவும் ஐ.நா. வின் அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த நடவடிக்கைகள் அவரது பணிக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கத்திலானதாக இருக்கலாம் என நாங்கள் கவலையடைந்துள்ளோம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.
தரிசா பஸ்டியன் அரசியல் மற்றும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாகச் செய்தி வெளியிடுவதை எழுதுவதைத் தடுப்பதற்கான முயற்சியாக இது இருக்கலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் ஊழியர் ஒருவர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் கடத்தல் தொடர்பான விசாரணையில் பஸ்ரியனின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது.
அதையடுத்து நீதிமன்ற தேடுதல் உத்தரவு அனுமதிக்கு அமைய, நாரஹேன்பிட்டி வீட்டிலிருந்து சி.ஐ.டி. யினரால் பிரபல ஊடகவியலாளர் தரிஷா பஸ்ரியனின் மடிக் கணினி உட்பட இலத்திரனியல் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருந்தன. (எ-இ)

# திவாகரன் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,செப்.17
யாழ்ப்பாணம், நீராவியடி நண்பர்கள் கழகத்தால் அமரர் சின்னத்தம்பி திவாகரனின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்தமாக "கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி" நடத்தப்படவுள்ளது.
இந்தப் போட்டி நாளை மதியம் சனிக்கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இலவசமாக நடத்தப்படவுள்ள இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும்கழகங்கள்0776327598,0775637701, 0777722265, 0778435425 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
வெற்றி பெறும் கழகங்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன்படி முதலாம் இடத்துக்கு 15,000 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் இடத்துக்கு 10,000 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். அத்துடன் கழகங்களுக்கு சுற்றுக்கேடயங்களும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சைவப்புலவர் சங்க செயற்குழுக் கூட்டம்

கொக்குவில்,செப்.17
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் அலுவலகத்தில் சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.
இச் செயற்குழுக் கூட்டத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்குரிய இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன.
எனவே அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

# சிங்களப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.17
யாழ்ப்பாண மாவட்ட அரச திணைக்கள அலுவலகங்களில் பணியாற்றும் ஆரம்ப வகுதி உத்தியோகத்தர்களில் பிரிவு 11 க்கான 50 மணித்தியாலய சிங்கள பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை இந்த வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொடர்ந்து பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரு நேர வகுப்புகளாக நாள் ஒன்றுக்கு 6 மணித்தியாலங்கள் நடைபெறவுள்ளன.
காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரையும் பின்னர் பிற்பகல் 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரையும் நடத்தப்படவுள்ளன. (ஐ-9)

# போதைப்பொருள் கடத்தல்; பெண்கள் உட்பட ஐவர் கைது

மன்னார்,செப்.17
போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டனர்.
மன்னார் உயிலங்குளம் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து 52 கிலோ கேரள கஞ்சா மற்றும் 920 கிலோ மஞ்சள், 17 இலட்சம் ரூபா பணம், லொறி மற்றும் டிராக்டர் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.
விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்களை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-56)

# பிரியங்கரவின் மீது ஹற்றனில் வழக்கு

கொழும்பு, செப்.17

இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியங்கர பெர்னாண்டோவுக்கு எதிராக ஹற்றன் நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஹற்றன் கொமர்ஷல் பிரதேசத்தில் தனியார் காணியை உரிமையாளரின் அனுமதியின்றி தனிமைப்படுத்தும் முகமாக உபயோகித்தமைக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு மீதான விசாரணை ஹற்றன் மாவட்ட நீதிபதி மற்றும் மாஜிஸ்திரேட் நீதவான் ட்ரோக்ஸி முன்னிலையில் நேற்று முன்தினம் நடந்தது.

இராணுவத் தரப்பில் முன்னிலையான இராணுவத்தின் சட்டப்பிரிவு சட்டத்தரணி மற்றும் அரச சட்டத்தரணி ஜயகித் மாதுரத்ன ஆகியோர், இராணுவத்துக்கு எதிரான வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்திற்கு உரிமை கிடையாது என்று வாதிட்டனர்.

தனியார் காணி உரிமையாளர் சார்பாக சட்டத்தரணி மைத்ரி குணரத்ன பிரசன்னமானார். எதிர்த்தரப்பு வாதத்தை கவனத்தில் கொண்ட நீதிமன்றம், ஆட்சேபனையை எழுத்து வடிவில் வரும் 29ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்ட அதேவேளை, வழக்கினை அன்று வரை ஒத்திவைத்தது இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் தளபதியான மேஜர் ஜெனரல் பிரியங்கர பெர்னாண்டோ ஹற்றன் நீதவான் நீதிமன்றில் வழக்குக்காக முன்னிலையாகியிருந்தார்.

லண்டனில் இலங்கைத் தூதரகம் முன் புலம்பெயர் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது அவர்களின் கழுத்தை அறுப்பேன் என சைகை மூலம் மேஜர் ஜெனரல் பிரியங்கர பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்திருந்தார். அதையடுத்துப் பெரும் சர்ச்சையில் சிக்கிய அவர் நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டிருந்தார். (எ-இ)

# திலீபனை நினைவுகூர கிளிநொச்சியிலும் தடை

கிளிநொச்சி, செப். 17

தியாக தீபம் திலீபனை நினைவு கூருவதற்கு கிளிநொச்சி மாவட்டத்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றின் தடை உத்தரவு பொலிஸார் ஊடாக நேற்றுமுன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், உப தவிசாளர் மு.கஜன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களான வீரவாகு தேவர், ரமேஸ் ஆகியோருக்கும் நீதிமன்றத் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களிலும் ஏற்கனவே நீதிமன்றத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,6)

# திலீபனை நினைவேந்த அனுமதி வழங்குங்கள்!



## அரசிடம் கோருகிறார் ராதா

ஹற்றன், செப். 17

தமிழ் இனத்துக்காக தன் உயிரை மாய்த்துக்கொண்ட தியாக தீபம் திலீபனுக்கான நினைவேந்தலுக்கு அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

'தன் இனத்துக்காகவும், சமூகத்துக்காகவுமே திலீபன் உயிரை மாய்த்துக்கொண்டார். ஆனாலும் அவரின் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் விதத்தில் பாதுகாப்புச் செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளார். அதுமட்டுமல்ல திலீபன் நினைவேந்தலுக்கான தடையையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. திலீபன் உட்பட நாட்டின் தியாகிகளை நினைவுகூருவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும், என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, தமிழ் மக்களின் நலன் கருதி வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகள் ஓரணியில் இணைந்து செயற்படவேண்டும் என்ற அழைப்பையும் ராதாகிருஷ்ணன் விடுத்துள்ளார். (ஓ.5.44)

# பொலிஸ் கண்காணிப்பில் பொங்கு தமிழ் தூபி



வவுனியா, செப்.17

வவுனியாநகரசபைவாயிலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாக பொலிஸார் நேற்று கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா நகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் தூபியில் இருந்து யாழ். நல்லூர் வரையிலான நடைபயணம் ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் நேற்று காலை ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. எனினும் பொலிஸார் அதற்கு தடை விதித்ததையடுத்து நடைபயணம் இடம்பெறவில்லை. இந்நிலையில் நேற்றுக் காலை முதல் பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாகவும் நகரின் முக்கிய பகுதிகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்சவின் வருகையையொட்டியே பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-110)

# பளை வைத்தியசாலை தொடர்பில் சபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்

கிளிநொச்சி, செப்.17

கிளிநொச்சி மாவட்ட பளை பிரதேச வைத்தியசாலையில் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்குதல் மற்றும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் என்பன தொடர்பான அறிக்கை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அமர்வில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ9 வீதிக்கு அருகில் உள்ள பிரதான வைத்தியசாலைகளாக கிளிநொச்சி பொது வைத்தியசாலை மற்றும் பளை பிரதேச வைத்தியசாலை ஆகியன காணப்படுகின்றன. இந்நிலையில் ஏ9 வீதிக்கு அருகில் பளை பிரதான வைத்தியசாலை இருப்பதால் சிறந்த மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்க வேண்டிய தேவைப்பாடு காணப்படுகின்றது.

பளை பிரதேச வைத்தியசாலையில் இரவு நேரங்களில் வைத்தியர் இன்மை மற்றும் சில முரண்பாடான விடயங்கள் தொடர்பாக அண்மை நாள்களாக வைத்தியசாலை தளம்பல் நிலையில் உள்ளது.

எனவே இவ் வைத்தியசாலையில் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க வேண்டும் மற்றும் அதனை மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதுடன் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வைத்தியர்களை நியமிக்க வேண்டும் என்பன தொடர்பில் பிரதேச சபை அமர்வில் உறுப்பினர் வீரபாகு தேவரினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பான அறிக்கை கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பப்பட உள்ளது என தவி சாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார். (ந-6)



# வீணர்க்கெங்கே புரியுமடா?

உடலின் அணுக்கள் ஒவ்வொன்றும்
உதிரக் குளத்தில் நீராடும்
விடலைப் பருவம் உனை வாட்ட
விடுதலைதான் என் வேட்கை என
கடலைக் குடிக்கும் பசியோடு
கடைசிவரைக்கும் துடித்தனையே
படலைதோறும் பந்தலிட்டுப்
பார்த்தா உனக்காய்ப் பசி கிடந்தோம்

மண்ணை மிதித்த கயவர்களை
மாறாக் கோபக் கனல் கொண்டு
உண்ணா நோன்பால் உருக்குலைத்த
உரிமைக்குரலே உயர் அறமே
புண்ணாய்ப் போக உடல் பொசுக்கி
புகன்றாய் புல்லர்க்கஹிம்சை சேர்
விண்ணாய் உயர்ந்த உன் வீரம்
வீணர்க்கெங்கே புரியுமடா?

-கம்பநேசன்

# குழுச் சண்டையில் தந்தை, மகன் காயம்

கொழும்பு, செப்.17

இரு குழுக்களுக்கிடையில் நடந்த மோதலில் தந்தையும், மகனும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் நடந்துள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உணவகம் ஒன்றில் இரு நபர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே குழு மோதலாக மாறியுள்ளது. (எ-இ)

# சம்பளப் படி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துக!

## வட.மாகாண உழைப்பு பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.17
பட்டதாரி நியமனச் சம்பளப் படி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தவும், அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தயாரிக்குமாறு கோரவும், வடக்கு மாகாண உழைப்பு பட்டதாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இது தொர்டர்பில் அவர்கள் அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

வடக்கு மாகாண உழைப்பு பட்டதாரிகள் அண்மையில், திருநெல்வேலியில் உள்ள சங்கத்தின் ஆலோசகர், எஸ்.சந்திரசேரத்தின் இல்லத்தில் கூடி மத்திய மாகாண அமைச்சின் கீழ் பணியாற்றும், உழைப்பு நிலையில் உள்ள பட்டதாரிகளின் சேவைக்காலம், சேவைப் பிரமாணக் குறிப்பில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பட்டதாரி நியமனச் சம்பளப் படி நிலையில் மாற்றத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்க கோரிக்கையை முன்வைக் கவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையை இலகுபடுத்தும் முகமாக வடக்கு மாகாண உழைப்பு நிலைப் பட்டதாரிகள் தமது சுய விவரங்களை under employedgra duatesunion@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்குமாறும், மேலதிக தகவல்களுக்கு தலைவர் அ.சுகந்தன் 077200 4202, செயலர், கே. றமணன் 0779409240 ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது.

# குழுச் சண்டையாக உருவெடுத்த இரண்டு குடும்பங்களின் சண்டை

## நால்வர் காயம்; மூவர் கைது

கிளிநொச்சி, செப்.17
இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம், கைகலப்பாக மாறி, குழுச் சண்டையாக உருவெடுத்த நிலையில், பொலிஸார், மற்றும் இராணுவத்தினரின் தலையீட்டால் சண்டை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. சம்பவத்தை அடுத்து மூவர் கைதுசெய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குடும்பங்களுக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கம், குழுச் சண்டையாக மாறி, இரவிரவாக மோதல் இடம்பெற்றுள்ளது. இந்த மோதல் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். மோதலைத் தடுக்கும் நோக்கில், தருமபுரம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, பொலிஸாரை உள் நுழைய விடாது மோதல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் இராணுவத்தின் உதவியை நாடினர். இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதன் பின்னர் மோதலில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டனர் என்றும், அதில் 3 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 4 மோட்டார்" சைக்கிள்கள், 50 போத்தல் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி கேரத் தெரிவித்தார். (ப-113)

# தாபரிப்பு பணம் செலுத்தாதவருக்கு சிறைத் தண்டனை

சாவகச்சேரி,செப்.17
எட்டு மாதங்கள் தாபரிப்பு பணம் செலுத்தாதவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று எட்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நீதிமன்றில் நடைபெற்ற தாபரிப்பு வழக்கில் குடும்பத்துக்கு மாதாந்தம் 12 ஆயிரம் ரூபா வீதம் தாபரிப்புப் பணம் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

தொடர்ச்சியாக எட்டு மாதங்கள் தாபரிப்பு பணம் செலுத்தவில்லையென அவரது மனைவி சட்டத்தரணி மூலம் நேற்று நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து சிறைத்தண்டனை விதிக்கப்பட்து. (ஐ-9)

# ஐ.தே.கவின் தலைமையை டிசெம்பரில் ஏற்கத் தயார்!

## ருவான் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, செப்.17



**டிசெம்பர் மாதமாகும்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் நம்பிக்கையை வென்றால் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்க நான் தயார்.**

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில் பிரதித் தலைவராக ருவான் விஜேவர்தன தெரிவு செய்யப்பட்டார். இந்தநிலையில் கங்காராம விகாரையில் ஆசிர்வாதம் பெற்றதை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் கட்சிக்காகச் செய்ய வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு உள்ளது. நாட்டு மக்களின் நம்பிக்கையை மீண்டும் வெல்வேன். கட்சியின் அனைத்துத் தலைவர்களையும் ஒன்றிணைத்து எதிர்கால பயணத்தை ஆரம்பிக்கவுள்ளேன். ஐக்கிய மக்கள் சக்தியின் சிலருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அவர்களும் கட்சியின் மீது கொண்டுள்ள நேசத்தால் அவர்களுடன் இணைந்து செயற்பட நான் தயாராக இருக்கின்றேன். அதாவது கட்சியை முழுமையாகப் புனரமைக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளேன் - என்றார். (எ-22)

# பொதுக் கூட்டம்

சாவகச்சேரி,செப்.17
சாவகச்சேரி கிராம்புவில் ஶ்ரீபால முருகன் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு படையாண்டான் தோட்டம் கந்தசாமி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகர சபை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெ.செல்வராணி , சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி வடக்கு கிராம அலுவலர் ஞா.பார்த்தீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# தீண்டியது பாம்பு!

காலபோகச் நெற்செய்கைக்காக வரம்பு கட்டும் பணியில் ஈடுபட்டிருந்த குடும்பத் தலைவர் ஒருவரை பாம்பு தீண்டியுள்ளது. அவர் சாவகச்சேரி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில்சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இயற்றாலை, வரணியில் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி ஆனந்தசேகரன் (வயது-34) என்பவரையே பாம்புதீண்டியுள்ளது. பிரதேசத்தில் அண்மையில் மழை பெய்ததையடுத்துகாலபோகநெற்செய்கைக்கான ஆரம்பக் கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. வரம்பு கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவரையே பாம்பு தீண்டியுள்ளது. அயல் வயல்களில் வேலை செய்தவர்கள் இவரை வாகனத்தில் ஏற்றி வந்து சாவகச்சேரி. மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (எ-9)

# மருத்துவமனை முன் வீதியில் வாகனங்கள்!

## போக்குவரத்துக்கு பெரும் இடையூறு

தெல்லிப்பழை, செப்.17
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் முன்பாகவுள்ள வீதியில் வாகனங்களை நிறுத்துவதால் பலரும் பல்வேறு வகையிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனையின் வளாகத்தினுள் நலன்புரி நிலையத்தால் நடத்தப்படும் மோட்டார் சைக்கிள், மற்றும் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் கொவிட் 19 தொற்றுக் காலத்தின் பின்னர் மூடப்பட்டன.

மருத்துவமனைக்கு வெளியில் பிரதேச சபையால் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்று நடத்தப்படுகிறது எனினும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் அது செயற்படுத்தப்படுகிறது. இந்நிலையில் மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள், மற்றும் பொதுமக்கள் மருத்துவமனையின் முன்பாகவுள்ள வீதியில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை நிறுத்தி விட்டுச் செல்வதால் அவ் வீதியில் பொதுப் போக்குவரத்துச் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை அங்கு காணப்படும் வியாபார நிலையத்துக்கு முன்பாக அதிகளவில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால் தமது வியாபார நடவடிக்கையில் பாதிப்புகள் ஏற்படுகின்றன என வியாபார நிலைய உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். எனவே மருத்துவமனைக்கு வருவோர் தமது வாகனங்களை தற்காலிகமாக உருவாக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்தில் விடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-39)

# தனியார் கடைகளில் ஒளிப்படப் பிரதிகள்

## சாவ. அரச திணைக்களம் ஒன்றின் அவலம்

சாவகச்சேரி,செப்.17
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் அலுவலகத் தேவைகளுக்கான ஒளிப்படப் பிரதிகள் தனியார் கடைகளில் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணியகத்தில் ஒளிப்படப் பிரதி இயந்திரம் இருந்தும் அது பழுதடைந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பணியகத்தில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோருக்கான மருத்துவச் சான்றிதழ் , கொரோனாத் தொற்று தொடர்பாகத் தனிமைப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டமைக்கான சான்றிதழ், தாய் சேய் வள சேவை மற்றும் பணியகத் தேவைகளுக்குப் பயன்படுத்தும் ஆவணங்கள் போன்றவற்றின் ஒளிப்படப் பிரதிகளை தனியார் கடைகளில் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"சுகாதாரத் திணைக்களத்தினருக்கு இது தொடர்பில் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் அந்த இயந்திரம் இதுவரை திருத்தி வழங்கப்படவில்லை எனவும், மக்களுக்குச் சேவை வழங்க வேண்டும் என்பதற்காகவே பணம் செலுத்தி பிரதி எடுக்கப்படுகிறது"என்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் தெரிவித்தனர். (ஐ - 9)

# சமூகத்தின் பங்களிப்பு கிடைத்தால் தற்கொலைகளைத் தடுக்கலாம்

## வன்னிப் பிராந்திய டி.ஐ.ஜி. தெரிவிப்பு

வவுனியா,செப்.17

**அண்மைய காலங்களாக அதிகரித்துக் காணப்படும் தற்கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு உள நல மருத்துவர்கள், பொது அமைப்பினர், உறவினர்கள் ஆகியோர் தமது பங்களிப்புக்களை வழங்கவேண்டும் என்று வன்னிப் பிராந்திய (டி.ஐ.ஜி.) பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த ஒருவாரத்தில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது. இதற்கான காரணங்களை இனங்கண்டு தற்கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்குரிய பொறிமுறைகளை உருவாக்குவதற்கு சேவை நலன்கொண்ட உள நல மருத்துவர்கள், பொது அமைப்பினர், ஆலோசனை வழங்குநர்கள், உறவினர்கள் முன்வர வேண்டும். ஒருவர் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்தால் அக் காரணம் மிகச் சிறியதாகவே காணப்படுவதுடன் அதனை தீர்த்துக் கொள்ளவும் அவரால் முடிகின்றது. எனவே அவரைத் தற்கொலை செய்யும் நிலையில் இருந்து மாற்ற முன்வரவேண்டும். ஒரு சில நொடிகளில் ஏற்படும் மன அழுத்தங்களால் அவர்களது வாழ்வையே மாய்த்துக்கொள்ளும் நிலைக்குச் சென்று விடுகின்றனர்.

உறவினர்கள் குடும்பத்தினரின் நிலைகளைச் சற்றும் நினைத்துப் பார்ப்பதில்லை. தற்கொலை செய்யும் நிலையை அவரது மனத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கையை உள நல மருத்துவர்கள், உளநலத்துறை அதிகாரிகள், சிறுவர்கள், பெண்கள் அமைப்பினால் முன்னெடுக்க முடியும். தற்கொலை செய்யும் நிலைக்குச் சென்றவர்கள். மனம் விட்டு உறவினர்கள், பெரியோர்களுடன் உரையாடவேண்டும். இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுப்பதற்குப் பொது அமைப்புக்கள் தமது பங்களிப்புக்களை வழங்க வேண்டும் - என்றார். (ப-110)

# அரச பொது நிர்வாகத்தை நடத்துகிறதா இராணுவம்?

## பயிலுநர் விடயம் தொடர்பில் தவிசாளர் நிரோஷ் காட்டம்

யாழ்ப்பாணம், செப்.17

பயிலுநர்கள் எங்கெல்லாம் செல்கின்றார்களோ. அவர்களைப் பின்தொடர்பவர்களாக இராணுவத்தினர் சென்று அவதானத்தைச் செலுத்துவது இராணுவத்தினர் பொது நிர்வாகத்தை நடத்தும் அரச கொள்கை மாற்றப்பட்டு விட்டதா? எனக் கேள்வி எழுகின்றது என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

பட்டதாரிப் பயிலுநர்களாக நியமனம் பெற்று அரச ஸ்தாபனங்களுக்குப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டவர்களின் பயிற்சி விடயத்தில் இராணுவத்தினர், பயிலுநர் வரவு விவரம் கோரல், குழுப்படம் பிடித்தல் ஆகியவற்றை மேற்கொண்டுள்ளனர். எமது பிரதேச சபைக்குப் பயிற்சிக்கு வந்தவர்கள் விடயத்தில் பயிற்சியின் முதல் நாளில் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை அறிந்து எதிர்வரும் நாள்களில் அவ்வாறு படையினருக்கு அனுமதிக்க முடியாது. அவ்வாறாயின் உத்தியோகபூர்வ கோரிக்கை பரிசீலனைக்குத் தேவை என தவிசாளராக நிர்வாகத்திடம் தெரியப்படுத்தியுள்ளேன். இதேவேளை பட்டதாரிப் பயிலுநர்களை இணைப்புச் செய்யும் கோரிக்கையை எமது பிரதேச சபைக்கு அனுப்பி வைத்த மாவட்டச் செயலகத்திடம் மேற்படி விடயத்தில் இராணுவத்திற்கு இருக்கின்ற சம்பந்தம் பற்றியும் அவை நிர்வாக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைமுறைக்கு உட்பட்டதா என விளக்கம் கேட்டும் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளோம். பட்டதாரிகளுக்கு அரச பயிற்சிகளை வழங்கவேண்டியது பொதுநிர்வாகத்துறையைச் சார்ந்தது. தலைமைத்துவப் பயிற்சி விடயத்தில் இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருந்தால் அதுபற்றி உரிய அறிவிப்புக்கள் நடைமுறைகள் மூலமாகவே இராணுவத்தினர் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். அதைவிட்டுது பயிலுநர்கள் எங்கெல்லாம் செல்கின்றார்களோ, அவர்களைப் பின்தொடர்பவர்களாக இராணுவத்தினர் சென்று அவதானத்தைச் செலுத்துவது இராணுவத்தினர் பொது நிர்வாகத்தை நடத்தும் அரச கொள்கை மாற்றப்பட்டு விட்டதா? எனக் கேள்வி எமக்கு எழுகின்றது. அதேவேளை எமது அரச நிர்வாகக் கட்டமைப்பு ரீதியிலான விடயங்களுக்குள்ளும் இராணுவத் தலையீட்டை ஏற்றுக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலையைக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது. (ப-156)

## சட்ட விதிகளுக்கு மாறாக கட்டடம்;

# அரச திணைக்களங்களுக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

மன்னார், செப்.17



மன்னார் நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான வீட்டின் எல்லைப் பகுதியோடு சட்ட விதிகளுக்கு மாறாக கட்டப்பட்ட கட்டடத்தை கட்டுவதை நிறுத்தக் கோரியும், மன்னார் நகரசபை, மற்றும் நகர அபிவிருத்தி திட்டமிடல் அதிகாரசபை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று தெரிவித்தும் மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் வீடு ஒன்றின் மதிலோடு வீட்டின் உரிமையாளரின் அனுமதி இன்றி அடுக்கு மாடி ஒன்றை அமைப்பதற்கு மன்னாரைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் முயன்றதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட தரப்பினர் இக் கட்டடம் சட்ட விதிகளை மீறிக் கட்டப்பட்டதை முன்னிறுத்தியும் குறித்த கட்ட நிர்மாணம் தங்களின் இயல்பு நிலை, தனித்துவத்தை பாதிப்பதாகவும் தெரிவித்து, மதிலில் இருந்து சிறிய இடைவெளி வைத்துகட்டப்பணியை மேற்கொள்ளுமாறு கோரி மன்னார் நகர சபை, வடமாகாண ஆளுநர் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கு கடிதம் அனுப்பினர். எனினும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்த பாதிக்கப்பட்ட தரப்பினர், நகர சபை பாதிக்கப்பட்ட தமக்கு எதிராகச் செயற்படுகிறது. சட்ட விரோத கட்டட நிர்மாணத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மன்னார் நகரசபை தவிசாளர் கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவித்தே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர். பிரச்சினைக்கான உடனடியான தீர்வைப் பெற்று தருமாறும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் ஆணைக் குழுவைக் கோரியுள்ளனர். (ப-56)

# சைவப்புலவர் சங்க செயற்குழுக் கூட்டம்

கொக்குவில்,செப்.17

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கொக்குவில் அலுவலகத்தில் சைவதலைவர் சைவப் புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இச் செயற்குழுக் கூட்டத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்குரிய இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகளை நடத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (ஐ)

# மசாஜ் நிலையங்கள் வடக்கில் இல்லை

கொழும்பு. செப்.17

நாடுமுழுவதிலும் 719 மசாஜ் நிலையங்கள் இயங்குகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. எனினும் வடக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு மசாஜ் நிலையங்களும் இல்லை என்று புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதிலும் பதிவு செய்யப்பட்டுள்ள மசாஜ் நிலையங்கள் தொடர்பான தகவல்களை, தகவல் அறியும் சட்டத்தின் கீழ், பொலிஸ் திணைக்களத்திடம் ஊடக நிறுவனம் ஒன்று கோரியிருந்தது. 2019ஆம் ஆண்டின் இறுதிவரையிலான காலப்பகுதியில் கிடைத்த தரவுகளிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் மசாஜ் நிலையங்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் 719 மசாஜ் நிலையங்கள் காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ள எந்தவொரு மசாஜ் நிலையங்களும் இல்லை. இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் நாட்டிலுள்ள மொத்த மசாஜ் நிலையங்களின் எண்ணிக்கையில் 2 சதவீதத்துக்கும் குறைவான மசாஜ் நிலையங்களே காணப்படுகின்றன.

இதன்படி, கிழக்கு மாகாணத்தில் 13, ஊவா மாகாணத்தில் 32, சப்ரகமுவ மாகாணத்தில் 36, வடமேல் மாகாணத்தில் 49, மத்திய மாகாணத்தில் 56, வடமத்திய மாகாணத்தில் 60, தென் மாகாணத்தில் 119, மேல் மாகாணத்தில் 354 மசாஜ் நிலையங்களும் காணப்படுகின்றன என்று அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# வாக்காளர் பதிவுகள் மீளாய்வு

கொடிகாமம்,செப். 17

தென்மராட்சி பிரதேசத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் மீளாய்வு பதிவுகள் கடந்த முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று படிவங்களை நிரப்பி வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் ஆறாம் மாதத்தில் இந்த பதிவுகள் இடம் பெற்று வந்த நிலையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இம் முறை காலதாமதமாக மீளாய்வு இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-159 . 9)

# இன்றைய நாள்

**மேடம்:** நினைத்த விஷயம் சிறு சிரமத்துக்குப் பின் நிறைவேறும். பெண்களுக்கு சில விவகாரங்கள் புதிராக இருக்கும். குடும்ப விவகாரத்தில் நீண்டநாள் முயற்சிக்குப் பலன் கிடைக்கும்.

**இடபம்:** சுயமுயற்சியால் வெற்றி பெறும் நாள். பணியாளர்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். பெண்கள் பிரச்சினைகளை சாமார்த்தியமாக கையாள வேண்டும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். சூழல் சிறப்பாக இருக்கும். தன்னம்பிக்கையுடன் பணியாற்றுவீர்கள். பெண்கள் நெருக்கமானவர்களை கண்மூடித்தனமாக நம்ப வேண்டாம்.

**கடகம்:** மன நிறைவான நாள். திட்டமிடல் காரணமாக நம்பிக்கை எழும். வேண்டுதலை நிறைவேற்று வீர்கள். பணியாளர்கள் ஆறுதல் பெறுவர். இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள் ஏற்படும்.

**சிம்மம்:** ஏற்ற இறக்கமான நாள். குடும்பத்தினரின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்புகளை அதிகரிக்க வேண்டாம்.

**கன்னி:** திடீர் நன்மை ஏற்படும் நாள். உங்கள் தரத்தை நீங்களாகவே குறைத்துக் கொள்ள வேண்டாம். வாகனம் ஓட்டுவதில் நிதானம் தேவை. கலைஞர்கள் அரிய வாய்ப்பைப் பயன்படுத்துவர்.

**துலாம்:** அதிக கவனத்துடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தின் மீது அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்குச் சிறு சங்கடம் நேர்ந்து, பிறகு சரியாகும்.

**விருச்சிகம்:** மனத்திடம் அதிகரிக்கும் நாள். பழைய அனுபவங்களை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வீர்கள். நெருக்கமானவர்களிடம் சிறு வாக்குவாதம் ஏற்படும்.

**தனுசு:** நிம்மதியான நாள். பெண்கள் மிக கவனமாக அடி எடுத்து வைப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் ஈடுபாடு வேண்டாம். பணியாளர்கள் புது வேகத்துடன் செயல்படுவீர்கள்.

**மகரம்:** சிரமமான நாள். எதிலும் அவசரப்படாமல் செயல்படுங்கள். வியாபாரிகள் யாரையும் நம்ப வேண்டாம். சிலருக்கு மட்டும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்.

**கும்பம்:** களைப்பான நாள். செய்யாத குற்றத்திற்கு விசாரிக்கப்படுவீர்கள். பணியாளர்கள் முக்கிய வேலைகளைச் செய்யாமல் விட்டுவிட்டு பிறகு வருந்த வேண்டாம்.

**மீனம்:** விட்டுப்போன வேலைகளைச் செய்துமுடிக்கும் நாள். இளைஞர்கள் உற்சாகமாக இருப்பீர்கள். வியாபாரிகளுக்குப் புதிய உத்திகள் தோன்றும்.







வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் கொடி யேற்றத்துடன் ஆரம்ப மானது. தொடர்ந்து 17 நாள்கள் திருவிழா நடைபெறும். (ஐ-173,159)

### தென்மராட்சி வடக்கு பகுதியில்

# பட்டப்பகலில் மாடுகள் திருட்டு

கொடிகாமம், செப்.17

தென்மராட்சி வடக்கு பிரதேசத்தில் மேய்ச்சலுக்கு விடப்படும் மாடுகள் இனந்தெரியாதோரால் பட்டப்பகலில் திருடப்பட்டு வருகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் மந்துவில் மேற்கு பகுதியில் தோட்டக் காணியில் கட்டப்பட்டிருந்த சுமார் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுவும் கன்றும் காணாமற்போயுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக உரிமையாளர், யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமம் ஆகிய இரு பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வரணி இயற்றாலையில் மேய்ச்சலுக்காக அவிட்டு விடப்பட்ட நாம்பன் மாடு இனந்தெரியாதோரால் பிடிக்கப்பட்டு அது இன்னொருவருக்கு விற்கப்பட்டுள்ளது. அவர் மாட்டை இறைச்சி ஆக்கியுள்ளார் மாட்டை இறைச்சியாக்கிய நபரை இனங்கண்டு கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டும் பொலிஸார் அங்கு இதுவரை சென்று பார்வையிடவோ விசாரணை செய்யவோ இல்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ந-159)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

கிளிநொச்சி, செப்.17

பளை இந்து ஆரம்ப வித்தியாலய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபர் ந. சர்வேஸ்வரன் கலந்துகொண்டு மாணவ தலைவர்களுக்குச் சின்னங்களைச் சூட்டினார். (வ-6)





காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடும் தாய்மார்கள் 66 பேருக்கான உலர் உணவுப்பொதிகள் கனடா உறங்கா விழிகள் தொண்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன. தலா 1300 ரூபா பெறுமதியான இந்தப் பொதிகளில் 12 பொதிகளை உறவுகளுக்கு கைகொடுப்போம் அமைப்பால் வழங்கப்பட்டுள்ளன. (ஐ)

# அரச காணி அபகரிப்பு

### நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

வவுனியா.செப்.17


வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதியோரக் காணியை அபகரித்து, பொதுமக்களிடம் பணம் பெற்று, விற்பனை செய்து வரும் நபர் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் வழங்கியுள்ளனர் .

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா தாண்டிக்குளம் ரயில் நிலைய வீதியோரத்தில் காணப்படும் வீதி அபிவிருத்தி திணைக்களம் ,ரயில் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான வீதியோரக்காணி களை மகாறம்பைக்குளம் பகுதியில் வசித்து வரும் தனிநபர் ஒருவர் அத்து மீறி அபகரித்து வருவதுடன் அக் காணிகளை பொதுமக்களுக்கு பணத்திற்கு விற்பனை செய்து வருகின்றார்.

எனவே, இந்நபர் அரச காணியை அபகரித்து விற்பனை செய்து வருவதைத் தடுத்து நிறுத்துமாறும், பொது மக்களை ஏமாற்றி வரும் அவரைக் கைதுசெய்து அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

இந்த நபர் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் கொக்குவெளி பகுதியிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் சிலவற்றையும் அபகரித்து பிற பகுதிகளில் வசித்துவருபவர்களுக்கு விற்பனை செய்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-110)





# பார்த்தீபனுடன் பன்னிரண்டு நாள்கள்

## தியாகதீபம் திலீபன் நல்லூர் வீதியில் நிகழ்த்திய அகிம்சை வேள்வி பற்றிய நேரடி அனுபவங்கள்

மு.வே.யோ.வாஞ்சிநாதன்

காலை ஆறு மணிக்குத் துயில் எழும்பிய திலீபனின் முகத்தைப் பார்த்த எனக்கு, ஒரு கணம் அதிர்ச்சியாயிருந்தது. காரணம் அவரின் உதடுகள் இரண்டும் பாளம்பாளமாக வெடித்து வெளிறிப்போயிருந்தன. கண்கள் நேற்றைக்கு இருந்ததைவிட இன்னும் சற்று உள்ளே போயிருக்கின்றமை போல் தோன்றியது...... முகம் வறண்டு, காய்ந்து கிடந்தது. தலை குழம்பியிருந்தது

"பல் விளக்கி முகம் கழுவவில்லையோ?"

"இல்லை வாஞ்சியண்ணை... வேண்டாம்."

கலைந்திருந்த தலைமயிரை நானே அவரருகில் சென்று வாரி விடுகிறேன். அவர் இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. "வெளிக்குப் போகேல்லையோ?" என்று மெதுவாகக் கேட்கிறேன்.

"போகவேணும் போலதான் இருக்கு."

"சரி கீழே இறங்கி வாருங்கோ" என்று கூறிவிட்டு, மேடையை விட்டு நானே முதலில் இறங்கி, கீழே இறங்குவதற்கு உதவி செய்ய முயன்றேன்.

"வேண்டாம் விடுங்கோ......நானே வருகின்றேன்" என்று என் கையை விலக்கிவிட்டு தானே கீழே குதிக்கின்றார்...

மனதை எவ்வளவு திடமாக வைத்திருக்கின்றார் என்று எனக்குள்ளேயே ஆச்சரியப்பட்டேன்.

மறைவிடத்துக்குச் சென்ற அவர், சிறுநீர் கழிக்க முடியாமல் சிரமப்பட்டார்.

5 நிமிடம்......
10 நிமிடம்......
15 நிமிடம்......
20 நிமிடம்......

நிமிடங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், எதுவித பயனும் ஏற்படவில்லை. அவரைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருந்தது. என் கண்கள் என்னையறியாமலே கலங்குகின்றன. மேடையின் வலப்புறத்தில் ஏறி அமர்ந்த திலீபன், தூரத்தில் தெரியும் வழக்கமான ஆட்களை அழைத்து உரையாடத் தொடங்கினார். "கண்டபடி பேசினால் களைப்பு வரும்... கொஞ்சம் பேச்சைக் குறையுங்கோ..."என்று அவரைத் தடுக்க முயல்கிறேன். ஆனால், என்னால் முடியவில்லை. தனக்கே உரிய சிரிப்பை என் வார்த்தைகளுக்குப் பதிலாக்கிவிட்டுத் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக அவர் நீர் அருந்தி 45 மணித்தியாலங்கள் முடிந்து விட்டன. இன்னும் எத்தனை நாள்களுக்குத்தான் அவர் இப்படி தன்னைத்தானே வருத்தப்போகிறார்?

இப்போதே சிறுநீர் கழிக்க முடியாமல் கஷ்டப்படத் தொடங்கிவிட்டார். இன்னும் இரண்டு நாள்கள் போனால் என்னென்ன நடக்குமோ? என்று எண்ணிய நான், அவரின் காதுக்குள் குசு குசுக்கிறேன்.

"என்ன பகிடியா பண்ணுறீங்கள்?...... ஒரு சொட்டுத் தண்ணீரும் குடிக்கமாட்டேன் என்ற நிபந்தனையு டன் தானே இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்கினனான்...... பிறகு எப்படி நான் தண்ணீர் குடிக்க வேண்டுமென்று கேட்டீங்கள்?"...

என்று ஆவேசத்துடன் என்மீது பாய்கிறார்.

"இல்லை...... இப்பவே உங்களுக்குச் சலம் போறது நின்று போச்சு...... இனியும் நீங்கள் தண்ணீர் குடிக்காமல் இருந்தால் மேலும் மேலும் கஷ்டமாக இருக்குமே...... அதுக்காகத்தான் கேட்டனான்......"

என்று அசடு வழியக் கூறிவிட்டு, வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டேன்.

"இனிமேல் என்னைத் தண்ணி குடிக்கச்சொல்லிக் கேட்கவேண்டாம்...... சரியோ?...... உண்ணாவிரதம் என்றால் என்ன? ...... தண்ணீர், குளுக்கோஸ், இளநீர் எல்லாமே உணவுதான்...... இந்த உணவுகளை எடுத்துக்கொண்டு எவ்வளவு நாளும் உயிர் வாழலாம். ஆனால், அது உண்ணாவிரதம் இல்லை. உண்ணாவிரதம் எண்டால் அதுக்கு அர்த்தம் வேணும்... ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணுமெண்டதுக்காகத்தான் எங்களை நாங்கள் வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கிறது...... இது வெறும் அரசியல் லாபத்துக்காக தொடங்கப்பட்டதல்ல...... வயிறு முட்டக் குடித்துவிட்டு மக்களையும் ஏமாற்ற என்னால் முடியாது."

அவரின் பேச்சில் இருந்த உண்மைகள் எனக்கும் தெரியும். ஆனால், திலீபனின் உயிர் மிகவும் பெறுமதி மிக்கது...... அதை இப்படி வருந்த விடுவதா? என்ற ஏக்கத்தில்தான் அப்படிக் கேட்டேன். ஆனால் அவர் தன் உயர்ந்த சிந்தனையால் என் பேச்சுக்கு ஆப்பு வைத்துவிட்டார்.

நேரம் செல்லச் செல்ல நல்லூர் ஆலய மைதானம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கடந்த இரு நாள்களாக ஆயிரக்கணக்காக வந்திருந்த சனக்கூட்டம், இன்று இலட்சத்தைத் தாண்டியிருந்தது. யாழ்ப்பாண நகரத்தில் உள்ள கல்லூரிகளிலிருந்து மாணவ - மாணவிகள் காலை 9 மணி முதல் வரிசைவரிசையாக,



## மூன்றாம் நாள்

வெள்ளைச் சீருடையில் அணிவகுத்து வந்து மைதானத்தை நிறைக்கத் தொடங்கினர். திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஓர் அங்கத்தவர் என்ற நினைப்பு விடுபட்டு, "தமிழ் இனத்தின் பிரதிநிதி" என்ற எண்ணம்தான் அந்தச் சனக்கூட்டத்தினர் மத்தியில் நிறைந்திருந்தது. தாய்க்குலம் - திலீபன் வாடி வதங்கியிருந்த கோலத்தைக் கண்டு கண்ணீர் சிந்தியது. அந்தக் கண்ணீர் மழையில் இதயம் கனிந்து விட்ட வருணபகவான் கூடத் திடீரென்று பலமாகக் கண்ணீர் சொரியத் தொடங்கிவிட்டான்.

ஆம் !

அனலாகக் கொதித்துக்கொண்டிருந்த சூரியன், ஒரு பிள்ளையின் உடலை வெப்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகத், தன்னைத் தானே கருமேகத்தின் போர்வைக்குள் மூடிக்கொண்டான் மழைநீர் கோயில் மைதானத்தில் ஆறாக ஓடிக்கொண்டிருந்தது.

ஆனால், பொதுமக்களில் ஒருவர்கூட எழும்பால் அப்படியே இருந்தனர். அப்பப்பா! மக்களின் உணர்வு மழைக்கு முன்னிலையில் அந்த வருணனின் மழைநீர் வெகு சாதாரணமானது என்ற எண்ணம் நிதர்சனமாகத் தெரிந்தது.

வாடிய நிலையிலும், சோர்ந்த நிலையிலும் தன் உயிரினும் மேலான மக்கள் மழையில் நனைவதைக் கண்ட திலீபன், அவர்களை நனைய வேண்டாம் என்று கைகளை அசைத்துச் சைகை காட்டினார். ஆனால், அவர்களோ அசைவதாக இல்லை. "உன்னால் மட்டும் தானா தமிழினத்துக்காக மெழுகாக உருக முடியும்? ...... உன் உயர்ந்த இலட்சியத்துக்கு முன் இந்த மழை வெகு சாதாரணமானது!" என்று கூறுவதுபோல், அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

முரளியும் - நிரஞ்சனும், வேறு சிலரும் படங்குகளை விரித்துக் கட்டிக் கொண்டிருந்தனர்.

ஒலிபெருக்கியில் காசி ஆனந்தனின் கவிதையொன்று முழக்கமிட்டுக்கொண்டி ருந்தது.

"திலீபன் அழைப்பது சாவையா? - இந்த சின்ன வயதில் இது தேவையா?" ......

மூன்றாம் நாளான இன்று இரண்டாவது மேடையில் சூடான பேச்சுக்களும், கண்ணீர்க் கவிதைகளும் முழங்கிக்கொண்டிருந்தன. பேச்சாளர்களில் ஒருவரும், எமது தீவிர ஆதரவாளருமான காங்கேசன்துறை கருணானந்தசிவம் ஆசிரியர் அவர்கள் இப்படிப் பேசினார்:

"தியாகி திலீபனின் உயிர் விலைமதிப்பற்றது. அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டும் உரியவர் அல்லர் ...... அவர் ...... தமிழ் இனத்துக்கே சொந்தமானவர்... அப்படிப்பட்ட திலீபன் அவர்கள் ஒரு சொட்டு நீராவது அருந்தி தன் உடலைக் காப்பாற்ற வேண்டும். அவர் தன் பிடிவாதத்திலிருந்து இறங்கி நீர் உணவு அருந்தி எம் கவலையைப் போக்கவேண்டும்...... இது எனது வேண்டுகோள் மட்டுமல்ல: இங்கே வந்திருக்கும் இலட்சக்கணக்கான மக்களின் வேண்டுகோளும் இதுதான்."

அந்தப் பேச்சைக் கேட்ட திலீபனின் முகம் வாடியதை நான் அவதானித்தேன்...... தான் பேசப்போவதாகக் கூறினார். அவரிடம் ஒலிவாங்கியைக் கொடுத்தேன்.

"இந்த மேடையில் பேசிய ஓர் அன்பர் என்னை நீர் உணவு அருந்தும்படி கூறியது என்னை அவமானப்படுத்துவது போல் இருக்கிறது...... நான் இந்த மேடையிலே நீராகாரம் எதுவும் எடுக்காமல் தான் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தேன்... இறுதி வரை இந்த இலட்சியத்தில் இருந்து மாற மாட்டேன்.

நீங்கள் இந்தத் திலீபனை நேசிப்பது உண்மையாக இருந்தால், தயவுசெய்து இனிமேல் என்னை யாரும் நீராகாரம் அருந்தும்படி வற்புறுத்த வேண்டாம். உங்கள் திலீபனுக்கு நிறைந்த மனக்கட்டுப்பாடும் தன்னம்பிக்கையும் உண்டு...... என் கோரிக்கைகளை இந்திய அரசு நிறைவேற்றாவிட்டால் நீரே எடுக்காமல் இறப்பேனே தவிர, இந்த அற்ப உயிரைக் காப்பாற்றுவதற்காக என் இலட்சியத்திலிருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டேன்." அவர் பேசி முடித்ததும், மழை ஓய்ந்துவிட்டது.

திலீபனுடன் சேர்ந்து அவன் கோரிக்கைகள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக தினமும் நல்லூர்க் கோயில் மைதானத்தில் அடையாள உண்ணாவிரதம் இருப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தது. பலர் தாமும் சாகும்வரை திலீபனைப்போல் ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா விரதம் இருக்க விரும்புவதாக,எம்மிடம் வந்து கூறினர். அவர்களின் வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாமல் திணறினோம்.

செல்வி. சிவா துரையப்பா என்ற பெண் அச்சுவேலியைச் சேர்ந்தவர்...... 17.09.1987 இல் திலீபனுக்கு ஆதரவாக மூன்றாவது (சிறிய) மேடை ஒன்றில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்......

அன்றிரவு திலீபன் சிறுநீர் கழிக்க முடியாமல் மிகவும் அவஸ்தைப்பட்டார். வைத்தியர் ஒருவரை அழைத்து வந்து அவரைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்தோம் ஆனால், திலீபன் அதை மறுத்துவிட்டார். எந்தவித பரிசோதனையும், சிகிச்சையும் தான் இறக்கும் வரை தனக்கு அளிக்கக்கூடாதென்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அன்று அவர் கஷ்டப்பட்டு உறங்கும்போது நேரம் நள்ளிரவு 1.00 மணி.

அவரின் நாடித்துடிப்பு : 11, சுவாசம் - 24.

- தியாகம் தொடரும்....


# விசேட சோதனையில் இருவர் கைது

கிளிநொச்சி, செப்.17
ஜெயபுரம் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்
பதில் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொலிஸ் நிலையங்களில் உள்ள அந்தந்த பிரிவுகளில் விசேட சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையிலேயே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதான இருவருக்கும் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# இராஜாங்க அமைச்சர் வவுனியாவுக்கு விஜயம்

*வீட்டுத் திட்ட பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராய்வு*

வவுனியா, செப்.17
கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டடப் பொருள்கள், தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுரத்த வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.
வவுனியா, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்துக்கு நேற்று விஜயம் செய்த அவர், வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட பணிப்பாளர் திருமதி வீ.குரூஸ், வீடமைப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் கலந்துரையாடியிருந்தார்.
இதன்போது வவுனியா மாவட்டத்தில் கட்டி முடிக்கப்படாத நிலையில் உள்ள வீடுகளின் விவரம், வீட்டுத் திட்ட பயனாளிகளின் விவரம் மற்றும் வீட்டுத் திட்டத்தை எதிர்காலத்தில் முன்னெடுப்பது என்பன தொடர்பில் கலந்துரையாடினார்.
விரைவில் வீடற்ற மக்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகளிடம் அவர் தெரிவித்தார். (வ-18)





# கைவிட்டது இ.போ.ச. பயணிகள் அந்தரிப்பு

## மன்னாரில் நேற்று சம்பவம்

**மன்னார், செப். 17**
**இலங்கை அரச போக்குவரத்துச் சேவையின் மன்னார் டிப்போ பணியாளர்கள் நேற்றுக் காலை திடீர் பணிப்புறக்கணிப்பு மற்றும் கண்டனப் போராட்டத்தை மேற்கொண்டனர். இதனால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.**



அரச போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள மன்னார் நகர சபையால் தற்காலிகமாக வழங்கப்பட்ட இடம் மன்னார் நகர சபையால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மூடப்பட்டுள்ளது. இதனையடுத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அரச போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள மன்னார் நகர சபையால் தற்காலிக இடம் வழங்கப்பட்டிருந்தது. மன்னார் நகர சபையின் புதிய பஸ் தரிப்பிடம் மக்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. அரச மற்றும் தனியார் இணைந்த சேவையாக இந்த பஸ் நிலையத்திலிருந்து மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.
ஆனாலும், அரச போக்குவரத்துச் சேவை அங்கிருந்து இடம்பெறவில்லை. நகர சபை தற்காலிகமாக வழங்கிய இடத்திலிருந்தே அரச போக்குவரத்துச் சேவை தொடர்ந்தும் இடம்பெற்று வந்தது. நகர சபையால் தற்காலிக இடத்திலிருந்து சேவையை முன்னெடுப்பதற்கு வழங்கப்பட்ட கால எல்லை முடிவடைந்த நிலையில் அது மூடப்பட்டது. தங்களுக்கு உரிய அறிவித்தல் வழங்காமல் நகர சபை அதனை மூடியதாகத் தெரிவித்து அரச போக்குவரத்துச் சேவையினர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
'இது நகர சபை பஸ் நிலையமா? மத்திய பஸ் நிலையமா?' 'எங்களுடைய பங்கு எங்களுக்கு வேண்டும்', 'நகர சபை தலைவரே தன்னிச்சையான போக்கை நிறுத்துங்கள்', 'அரச போக்குவரத்துச் சபைக்கு நீங்கள் கட்டளை போடுவதா?' என்பன உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதேவேளை மக்களின் நலனை கருத்தில் கொண்டு மன்னார் தனியார் போக்குவரத்து சபையினர் சீரான முறையில் தமது சேவைகளை முன்னெடுத்தனர். (ஒ,5,56,213,60)

# தாக்குதலுக்குள்ளான மாணவன் தொடர்ந்தும் வைத்தியசாலையில்

கிளிநொச்சி, செப்.17
சிரேஷ்ட மாணவர்களின் தாக்குதலுக்குள்ளான புதுமுக மாணவர் ஒருவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த 4 புதுமுக மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை இரவு கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.
மது போதையிலிருந்த சிரேஷ்ட மாணவர்களால் தாம் தாக்கப்பட்டோம் என இவர்கள் தெரிவித்திருந்தனர். சட்ட வைத்திய அதிகாரி மற்றும் பொலிஸாரின் விசாரணைகள் நேற்று நிறைவடைந்த நிலையில் 3 மாணவர்கள் வைத்தியசாலையிலிருந்து வெளியேறினர்.
ஒரு மாணவன் தலைப்பகுதியில் தாக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் வைத்து கண்காணிக்கப்பட்டு வருகின்றார். (வ-6)



# வயல் காணி ஆக்கிரமிப்பு: தடுத்து நிறுத்துமாறு முறைப்பாடு

வவுனியா,செப்.17
வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் காணப்படும் வயல் காணிக்கு மண்நிரவி மதில் அமைக்கும் பணியை நிறுத்துமாறு கோரி அப்பகுதி மக்களினால் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நேற்றுமுன்தினம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது . இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,
வவுனியா இறம்பைக்குளம் சங்கரப்பிள்ளை வீதியின் வலப்பக்கம் காணப்படும் குளத்தை அண்டிய வயல் காணிக்கு உரிமை கோரும் சிலரால் அப்பகுதிக்கு மண் நிரவி மதில் அமைக்கும் பணிகள் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு வயல் காணிக்கு மண் நிரவி மதில் அமைப்பதால் குளத்திற்குச் செல்லும் மழை வெள்ளம் தேங்கி அப் பகுதியில் மழைகாலத்தில் பாதிப்பு ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது .
எனவே இதனால் அப் பகுதியைச் சூழவுள்ள பகுதியில் குடியிருக்கும் எமக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் நிலை காணப்படுவதுடன் அங்குள்ள ஆலயத்திற்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதனைக் கருத்திற்கொண்டு இந் நடவடிக்கையை உடன் தடுத்து நிறுத்துமாறு கோரி அங்கு வசிக்கும் மக்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று நேற்றுமுன்தினம் வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர் .
இவ்விடயம் குறித்து வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது , நடவடிக்கை மேற்கொள்வதற்காக அம் மகஜர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ந-110)

# மமதை வேண்டாம் ஒன்றுபட்டு செயற்படுங்கள்

## மன்னார் அரச அதிபர் அறிவுரை

மன்னார், செப்.17
தொற்று நோய்களிலிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்ற மமதையில் இருக்காது இந் நோய்களிலிருந்து விலகி நிற்க அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.
மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் டெங்கு ஒழிப்பு, கொரோனாத் தொற்று நோய் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், காலநிலை மாற்றம் பெற்று பரந்துபட்ட மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஐப்பசி, கார்த்திகை, மார்கழியில் தான் மன்னாரில் மழை பெய்யும் என இருந்தோம். ஆனால் அக்காலங்களில் மட்டும் டெங்கு பரவாதிருப்பதற்கான நடவடிக்கையை எடுக்கலாம் என்ற நிலைப்பாடு எம்மில் இருக்கக் கூடாது தமிழ் நாட்டிலிருந்து கடல் மார்க்கமாக நாளாந்தம் கடத்தல்கள் இடம்பெறுகின்றன.
அங்கு பயங்கரமாக பரவி வரும் கொரோனா வைரஸ் இதன் மூலம் எமது மாவட்டத்துக்கும் நாட்டுக்கும் பரவி விடுமோ என்ற அச்ச நிலை காணப்படுகின்றது. அனைத்து திணைக்களங்களும், மக்கள் ஒருங்கிணைந்து சுகாதார நடைமுறைகளைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (வ-60)

# இலங்கையின் மீது நம்பிக்கை இல்லை

## ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவளித்த நாடுகள் கூட்டாகத் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.17**
**இலங்கையின் உள்நாட்டு நல்லிணக்க செயற்பாடுகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்று இலங்கை மீதான ஐ.நா.மனித உரிமைகள் சபைத் தீர்மா னத்துக்கு பிரதான அனுசரணை வழங்கிய நாடுகள் தெரிவித்துள்ளன.**

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் தனது உரையில் இலங்கை குறித்து வெளியிட்ட கரிசனைகளை கருத்தில் எடுத்துள்ளோம் எனவும் அந்த நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

கனடா, ஜேர்மனி, பிரித்தானியா, வடக்கு மசெடோனியா மற்றும் மொன்டிநீக்ரோ ஆகிய நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டனின் மனித உரிமை விவகாரங்க ளுக்கான தூதுவர் ரீட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த மார்ச் அமர்வில் இலங்கை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை சபை ஆராயும் என அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தீர்மானத்தின் மூலம் இலங்கை கடந்த கால காயங்களை ஆற்றுவதற்கும் மனித உரிமை ஆணையாளரால் பதிவு செய்யப்பட்ட தீர்வு காணப்படாத பெரும் உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு தீர்வை காண்பதற்குமான கருத்துடன்பாட்டுடனான கட்டமைப்பை ஜெனீவா தீர்மானம் மூலம் மனித உரிமைகள் சபை உருவாக்கியது.

இந்தக் கட்டமைப்பு கருத்துடன்பாட்டுடனும் இலங்கையின் முழுமையான ஆதரவுடனும் பேரவையால் இரண்டு முறை புதுப்பிக்கப்பட்டது.

இலங்கை அரசு அந்த தீர்மானத்தைத் தொடர்ந்தும் ஆதரிக்கவில்லை எனத் தெளிவாக சபைக்குத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு நாட்டின் பல்வேறுபட்ட சமூகத்தினர் மத்தியில் நல்லிணக்கம் சமாதான சகவாழ்வு நீதி ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கான தனது தொடரும் அர்ப்பணிப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசு புதிய உள்நாட்டு பொறிமுறையொன்று இந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் எனக் குறிப்பிட்டுள்ளது. நாங்கள் இந்த அர்ப்பணிப்பை பாராட்டும் அதேவேளை, கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட அவ்வாறான உள்நாட்டு நடவடிக்கைகள் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதல் மற்றும்உண்மையான நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதில் கவலை தரும் விதத்தில் போதாதமை கொண்டவையாக காணப்பட்டுள்ளன.

இலங்கையின் புதிய அணுகுமுறை தொடர்பாக இந்தச் சபை கவனம் செலுத்த விரும்புகின்றது, கடந்த கால முயற்சிகளில் இருந்து இந்த முயற்சி எவ்வளவு வித்தியாசமானதாகக் காணப்படும் மக்களை மையப்படுத்தும் என்பதை அவதானிக்க விரும்புகின்றது. காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் இழப்பீட்டுகளுக்கான அலுவலகம், உட்பட சுயாதீன ஆணைக்குழுக்களின் எதிர்காலம் முக்கியமானது- என்றார். (எ-இ)



## வகுப்பறை கட்டடம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு, செப்.17
மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட தேத்தாதீவு மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட இருமாடி வகுப்பறைக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. கிராமிய வீடமைப்பு மற்றும், நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் 11,000,000.00 நிதி ஒதுக்கீட்டில் இக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. (வ-46)

## எயார்லைன்ஸ் ஊழியர்கள் ஐவர் கைது

கொழும்பு, செப்.17
இலங்கையர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது மற்றும் இலங்கையூடாக நடக்கும் ஆள் கடத்தல் விவகாரத்தில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் ஊழியர்கள் சிலர் தொடர்புபட்டிருந்த விவகாரம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடந்த ஜூலை 27ஆம் திகதி போலிக் கடவுச்சீட்டுடன் விமான நிலையத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டதை தொடர்ந்து இந்த மோசடி அம்பலமாகியுள்ளது. அதையடுத்து எயார்லைன்ஸ் உத்தியோகத்தர்கள் நால்வர் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். மோசடி நடவடிக்கைகளுக்கு உதவுதல் மற்றும் சட்டவிரோத வெளிநாட்டுப் பயணங்களை ஏற்பாடு செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. (எ-இ)




அளவில் சிறிதும் உயரத்தில் அதிகம் என்பதால் எந்தவித சிரமமான வேலைஎன்றாலும் இலகுவாக செயல்படுத்த முடியும்.

குறைந்த திருப்பும் அளவின காரணமாக சிறிய இடத்திலும் வேலை செய்வது இலகு.

அதிக சக்தியும் செயல்திறன் மிக்க சிக்கனமான (53 குழாய் சக்தி) கொண்ட என்ஜின்.

வலுவான ROPS கட்டமைப்பினால் இயக்குபவருக்கு வசதி மற்றும் பாதுகாப்பு அதிகம்.

சின்ரோ சட்டல் என்பதால் முன்பக்கமும் பின்பக்கமும் செல்லும் திறன்.

நம்பிக்கையின் பாரம்பரியத்தை பிறவுன்ஸ் வழங்குகிறது.

0773 457 988 - துஷான் 0773 457 987 - லக்ஷித

Browns
Agriculture

# உள்ளூர் உற்பத்திக்கு சிறந்த சந்தை வாய்ப்பு

## அரசு மெகா திட்டம் என்கிறார் அமைச்சர் மஹிந்தானந்த



**கிளிநொச்சி, செப். 17**

**இறக்குமதிப் பொருள்களை முழுமையாக நிறுத்தவும், உள்ளூர் உற்பத்திக்கான சந்தை வாய்ப்பை அதிகரிக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.**

'சுபீட்சமான நோக்கில் விவசாய மறுமலர்ச்சி எனும் தேசிய வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் வடக்குக்கு வந்த அமைச்சர்கள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சிக்கு வந்த அவர்கள் இரணைமடு விவசாய ஆராய்ச்சி நிலையம், கிளிநொச்சி வளாகத்திலுள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடம் ஆகியவற்றுக்கும் வந்தனர். மாலை 5 மணியளவில் பரந்தனில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தில் விவசாயிகள் பண்ணையாளர்களைச் சந்தித்தனர். இதன்போது விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் கேட்டறிந்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்ததாவது; விவசாயிகள், பால் உற்பத்தியாளர்களுக்கு தேசிய வேலைத்திட்டத்தின் ஊடாக மானியங்கள் வழங்கப்படவுள்ளன. விவசாயத்துக்குத் தேவையான பசளை, மரக்கறி, மஞ்சள், கிழங்கு போன்றவற்றுக்கான விதைகள் மானியமாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. குறித்த உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைவாய்ப்புக்களையும் ஏற்றுமதிகளையும் முன்னெடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான பசளைக் களஞ்சியம் ஒன்றை அமைத்து அதன் ஊடாக மானியமாகவும், குறைந்த விலையிலும் விவசாயத்திற்குத் தேவையான பசளைகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான திட்டங்களை யும் நடைமுறைப்படுத்த உள்ளோம் - என்றார். (ப-6)



## அரச நியமனங்கள் கிடைக்காத பட்டதாரிகள் மனுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

பட்டதாரி நியமனங்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளித்தனர்.

அண்மையில் அரசால் பட்டதாரிகள் நியமனங்கள் வழங்கப்பட்ட நிலையில், ஊழியர் சேமலாப நிதியைக் காரணம் குறிப்பிட்டு சிலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அவர்களின் மேன்முறையீடு தொடர்பான விண்ணப்பங்கள் கடந்த 15ஆம் திகதிவரை ஏற்கப்பட்டிருந்தன.

இந்த நியமனங்களை உடன்வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி நேற்று ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கம் ஊடாக நாட்டில் உள்ள அனைத்து மாவட்டச் செயலகங்களிலும் மனுக்கள் கையளிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலும் மனுக் கையளிக்கப்பட்டது.

இதுதொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) என்னிடம் மனுக்கையளிக்கப்பட்டது. இந்த நியமனங்கள் வழங்கப்படுவதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. அரசு அவர்களுக்கு மேன்முறையீடு செய்வதற்கான காலத்தை வழங்கி யிருந்தது. அந்தப் பகுதிக்குள் கிடைத்த விண்ணப்பங்களில் நியாயமான காரணம் இருப்பின் அதைச் சாதகமாக அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகின்றேன். அது தொடர்பான தீர்மானம் விரைவில் அரசால் அல்லது ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்படும் என்று நம்புகின்றேன்- என்றார். (எ-20)

## திலீபனை நினைவேந்த மன்னார் நீதிமன்று தடை!

### சாள்ஸ், செல்வம் எம்.பிக்கும் அழைப்பாணை

மன்னார், செப்.17

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளைப் பிறப்பித்திருந்த நிலையில் மன்னார் நீதிமன்றமும் தடை விதித்துள்ளது.

மன்னார் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் தியாகி திலீபனின் நினைவஞ்சலி நிகழ்வை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும், தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளை மீள் எழுச்சி செய்யும் நோக்கில் நித்திலம் பதிப்பகத்தின் உரிமையாளர் வி.எஸ். சிவகரன் , மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் நகரசபை உப தவிசாளர் செபஸ்டியன் ஜான்சன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் ஊடாக அந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படுகிறது எனவும் தெரிவித்து மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்குகொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

நினைவஞ்சலி நிகழ்வை நடத்துவதால் வாகன நெரிசல் ஏற்படும் என்பதுடன், நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களுக்கு கிளர்ச்சி பற்றிய எண்ணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்றும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலுக்கு இவை பங்கம் ஏற்படுத்தும் என்பதாலும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மன்னார் நீதவான் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் நினைவேந்தல் நிகழ்வை நடத்த முடியாது என்றே அந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வி.எஸ். சிவகரன், மன்னார் நகர முதல்வர் அன்ரனி டேவிட்சன்,மன்னார் நகரசபை உப தவிசாளர் செபஸ்டியன் ஜான்சன் , நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணியளவில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (ப-56)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.17

சாகித்திய ரத்னா பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுதிய "அமெரிக்காவிலிருந்து பாய்ந்த அன்பு வெள்ளம்" எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நூலின் அறிமுக உரையை ஆங்கிலத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவன் கலாநிதி ம.திருவரங்கனும், தமிழ்மொழியில் அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும் ஆற்றவுள்ளனர்.

ஆங்கில பதிப்பின் முதல் பிரதியை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவன் சட்டத்தரணி க.சுகாஸும்,தமிழ் பதிப்பின் முதல் பிரதியை வண.ரி.எஸ். யோசுவாவும் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (ஐ-50)

## இந்து தர்மாசிரியர் பரீட்சை

கொடிகாமம்,செப்.17

இந்து தர்மாசிரியர் பரீட்சை எதிர்வரும் 26,27 ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் 3 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

26 ஆம் திகதி சனிக்கிழமை 9 மணி தொடக்கம் 12 மணிவரை "வேதங்களும் ஆகமங்களும்", பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4 மணி வரை "சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்", 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு "சைவ சமய வரலாறு", பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 4மணிவரை "பன்னிரு திருமுறைகள்", ஒக்ரோபர் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை "கோவில்களும் கலைகளும்" ஆகிய பாடங்களுக்கு பரீட்சைகள் நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஐ-159)

## கண்காட்சியும் விற்பனையும்

கொழும்புத்துறை,செப்.17

சுயதொழில் கண்காட்சியும்,விற்பனையும் நாளைமறுதினம் சனிக்கிழமை கொழும்புத்துறை மாதர் சங்க முற்றம் (கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்துக்கு அருகில்) முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் கொழும்புத்துறை ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு சுய முயற்சி குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஐ)

## கோடா வைத்திருந்தவருக்கு 1,20,000 ரூபா தண்டம்

சாவகச்சேரி, செப்.17

கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொடிகாமம், பெரியநாவலடி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இரு பரல்களில் வைக்கப்பட்டிருந்த ஒரு லட்சத்து 45 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா கைப்பற்றப்பட்டதுடன், சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, அவர் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார். அதையடுத்து அவருக்குத் தண்டம் விதிக்கப்பட்டது. (எ-9)

# நினைவலைகள்

1ஆம் ஆண்டு 11ஆம் மாதம்



அமரர் வரப்பிரகாசம் சவரிமுத்து
பிறப்பு 28.03.1922 இறப்பு 17.09.2019

அமரர் சவரிமுத்து லூர்த்தம்மா
பிறப்பு 18.11.1934 இறப்பு 17.10.2019

குருதியையும், வியர்வையையும் தாய்ப்பாலாக்கி,
எம்மை ஆலமரமாக்கிய தெய்வங்களே!
**நீங்கள் மண்மடி தனில் உறங்கி**
ஓராண்டு ஆவிட்டது.
**ஐயா, அம்மா உங்கள் நினைவு என்றும்**
எங்களை விட்டு அகலாது

உங்கள் பிரிவால் வாடும்
அன்புப் **பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

# வீதியில் பெண்ணிடம் சங்கிலி அறுப்பு!

யாழ்ப்பாணம், செப். 17


வீதியில் சென்ற பெண் அணிந்திருந்த சுமார் ஒன்றரை பவுண் மதிப்புள்ள தங்க நகை அறுக்கப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இந்தச் செயலைச் செய்துள்ளனர்.

தெல்லிப்பழை சந்திப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தப் பெண் சென்றுகொண்டிருந்தபோதே மேற்படி சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் துறைமுக அதிகார சபை - திருகோணமலை)



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தம்பிப்பிள்ளை நேற்று (16.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகமுத்து தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நடராசா - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், வேலுப்பிள்ளை, செல்லத்துரை, தங்கம்மா மற்றும் பொன்னம்மா, நடராசா ஆகியோரின் சகோதரனும், தயாபரன் (லண்டன்), சத்தியசீலன் (ஆசிரியர் - சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி), கௌரிதாசன் (ஜேர்மனி), ஞானசீலன் (இந்தியா), காந்தீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகௌரி, கேதீஸ்வரி, கேதீஸ்வரி, ரேவதி ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற மல்லிகாதேவி மற்றும் சறோஜினி தேவி ஆகியோரின் மைத்துனரும், யாமினி, யாதவன், சங்கவி, லிதியா, சாருஜன், கரிணி, துவிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2020) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நாவலர் வீதி, மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 271 9999

## மரண அறிவித்தல்

பிறப்பு
1963
.
11
.
29



இறப்பு
2020
.
09
.
16

### தர்மலிங்கம் லோகநாதன் (நாதன்)

பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் பாண்டியந்தாழ்வை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் லோகநாதன் நேற்று (16.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் தர்மலிங்கம் மற்றும் காலஞ்சென்ற வடிகாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், மார்டின்-பத்மாவதி தம்பதிகளின் மருமகனும், லீலாவதியின் (சாந்தி) அன்புக் கணவரும் கஜமுகன் (பிரான்ஸ்), நிஷாந், லவன், பிரசாந், வினோதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்தினி, கீர்த்திகா, ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கமலநாதன், வைத்திலிங்கம், குமுதா, நந்தினி, முருகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12/3, சந்தனமாதா கோவில் ஒழுங்கை, பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இன்று (17.09.2020) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் துண்டி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**12/3, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,**
**பாண்டியந்தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.**
**077 371 2304 (மகன்)**
**077 900 1242 (மகன்)**

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
03
.
12
.
1957



அம்பிகை அடியில்
16
.
09
.
2020

### செல்லையா சுந்தரலிங்கம்

**நயினாதீவு**

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், கொக்குவில் முதலிகோவில் ஒழுங்கை, இல. 19/01 ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுந்தரலிங்கம் நேற்று (16.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா, செல்லம்மா, பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராசலெட்சுமியின் ஆருயிர் கணவரும், சஜீபா (கனடா), தரண்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபாஸ்கர் (கனடா), நாகதர்சன் (இயந்திர இயக்குனர், வேலணை பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீமுருகன், சங்கரலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்தகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கோகிலாம்பாள், சுந்தராம்பாள், அன்னலெட்சுமி, கைலாசபதி (கனடா), கணேசபதி (லண்டன்), தேவகுமாரி (ஜேர்மனி), ஜெகலெட்சுமி, மகாலெட்சுமி (பிரான்ஸ்), செல்வமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும், வெற்றி (கனடா), ஆதவன், ஆதித்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2020) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**19/01, முதலிகோவில் ஒழுங்கை,**
**கொக்குவில்.**
**076 915 3542, 077 649 8035**

தகவல்:
குடும்பத்தினர்.

**விற்பனைக்குண்டு**

நல்லின தென்னம்பிள்ளைகள்
விற்பனைக்குண்டு.

**070 195 6325**

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வளாகத்தில் 'உலக நோயாளர் பாதுகாப்புத் தினம்' இன்று கடைப்பிடிக்கப்படவுள்ளது. காலை 11 மணியளவில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ம)

# நீதிபதி சசிமகேந்திரன் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம், செப். 17

மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப் பட்டுள்ளார்.

நீர்கொழும்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பணிபுரியும் அவர், வரும் 21ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

2 மேல் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற அமர்வை மேல் நீதிமன்ற நீதிபதி தாவூத் லெப்பை அப்துல் மனாப்,மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் இணைந்து முன்னெடுப்பர். (த)

ஓம் விராட் விஸ்வப் பரப்பஹ்மனே நமஹ

## விஸ்வகர்மா சிற்பக் கூடம்

(பரம்பரை பஞ்சகம்மாளர்)

### திருக்கோயில் பொருட்கள் சிற்பசாஸ்த்திர (தேவாங்குலம்) முறைப்படி செய்பவர்




01. மூலஸ்தான காற்புறவாய் அளவின் படி. பஞ்சதாளம். நவ தாளம் தஸதாளமானங்களுடன் ஆலயத்திற்கு வந்து அளவு எடுத்து அங்கலக் ஷனத்துடன் விக்கிரகங்கள் செய்து தரப்படும்.
02. உற்ஸவமூர்த்திகள். மூலமூர்த்தியின் பங்கு மானப்படி உத்தம தஸதாளப்படி சிற்பரட் தினா கரம். காஸியப்ப சிற்பசாஸ்திரம். சிற்பச் செந்நூல் மூர்த்தி தியானம் (தேவாங்குல முறைப்படி) அமையபெறும்.
03. விமானம். இராஜகோபுரம். பண்டிகைகளின் அளவின்படி வார்ப்புக் கலஸங்கள். தகட்டுக் கலஸங்கள் செய்துதரப்படும். கலசங்களுக்கு வரகரிஸி தடிப்போட்டு செய்துதரப்படும்.
04. மூலமூர்த்திகள். பரிவாரமூர்த்திகள். பஞ்சகோஸ்ட மூர்த்தி களுக்கு. வெள்ளி. தங்க அங்கிகள் செய்து தரப்படும். ஸ்நபனச் செம்புகள். குடங்கள். சோட உபசாரங்கள். பட்டுகுடைகள் முறையாக செய்துதரப்படும்.
05. உற்ஸவமூர்த்திகள் பின்னப்பட்டு இருந்தால் முறையாக செய்துதரப்படும்.

**விஸ்வகர்ம சிற்பக் கூடம்** (பரம்பரை பஞ்சகம்மாளர்)

விஸ்வஸ்ரீ தியாகராஜா ரவிசங்கர் ஆச்சாரி
இல. 97/2, சென் ஜேம்ஸ் வீதி, கொழும்பு 15.
தொ.பே.இல. 077 900 6584

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சி.சத்தியநாயகி
அவர்களின் பாசமிகு கணவர்


**மாரிமுத்து சிவகுமார்**

அவர்களின்

பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்,
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி



தென்மராட்சி பிரதேச செயலக காணி அலகில்
அபிவிருத்தி அலுவலராக கடமையாற்றும்
திருமதி லஜிதா உதயகுமார்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**சுப்பிரமணியம் இந்திரராசா**

(ஓய்வுநிலை கிராம அலுவலர் )

அவர்கள் 14.09.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்



**செல்லப்பா இரவீந்திரநாதன்**

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா இரவீந்திர-நாதன் நேற்று (16.09.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மாமாங்கம் தம்ப-தியரின் மகனும் காலஞ்சென்ற செல்வமாணிக்கம் மற்றும் ருக்மணியின் மருமகனும். இந்திராதேவியின் அன்புக் கணவரும். கஜானன். கஜீபன். கஜானா ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்ற ராதா. மற்றும் ஜெயராணி. மல்லிகாதேவி. ஜெகநாதன் (பாபு). காலஞ்சென்ற காத்தவராயர் மற்றும் பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும். பாலச்சந்திரன். இராசேந்திரன். மகேந்திரன். ஞானேஸ்வரி. செல்வேஸ்வரி. சரோசாதேவி மற்றும் காலஞ்சென்ற சுதர்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## வீடு தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரியும் பெண்ணொருவருக்கு பாதுகாப்பான சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. கொக்குவில். நல்லூர். திருநெல்வேலி. ஆகிய இடங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 074 004 8401**

## வருஷாப்திக நினைவு
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சந்தனக்குருக்கள் குமாரசாமிக்குருக்கள்**

பொன்னம்பல வாணேசனுக்கு
பொறுப்புகள் பணிகளாற்றி
எண்ணம்போல் அடியார்
வாழ்வு இனிதே நிறைவேற
பண்பிற்பழுத்த குமாரசாமிசர்மா
பரமபதம் அடைந்த நாளில்
அன்னாரின் ஆத்ம சாந்திக்கு
இறையருள் வேண்டுகின்றோம்.

கந்தசுவாமி
அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம், நீர்வேலி.

(இராஜேந்திர சுவாமிநாத
குருக்கள் ரவீனா)

## 81st Birthday Remembrance



**Dr. (Mrs.) Senkamalam Theivendran**


Date of Birth : 17.09.1939
Date of Death : 23.04.2020

Remembering you with
Love and Affection
on your Birthday

*Family members*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
17 • 09 • 1946



மறைவு
19 • 08 • 2020

அமரர் லயன்

**ஆறுமுகம் வரதராஜன் (JP, MJF)**

(ஓய்வுபெற்ற மின்அத்தியட்சகர் - சுன்னாகம்)

கடந்த 19.08.2020 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் லயன் ஆறுமுகம் வரதராஜன் JP MJF அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் (15.09.2020) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.09.2020) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

இராஜசக்தி
வண்வடமேற்கு, ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகள்

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி ( வெளிவாரி )**

1. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2018
2. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சைகளினை 01.10.2020 (வியாழக்கிழமை) தொடக்கம் 11.10.2020 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 28.09.2020 (திங்கட்கிழமை) தொடக்கம் 30.09.2020 (புதன்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு **021- 222 – 3612** என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
16.09.2020

# அரசியல் பின்புலம் கூறி வந்தால் திருப்பிவிடவும்

## பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்து

**கொழும்பு, செப். 17**
**ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உயர் அரச அதிகாரிகளின் பெயர்களை குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளுமாறு முன்வைக்கப்படும் வேண்டுகோள்களை தயங்காது நிராகரிக்குமாறு அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி அலுவலக அதிகாரிகளின், பிரதமரின் அலுவலக அதிகாரிகளின் மற்றும் ஏனைய உயர் அரச அதிகாரிகளின் உத்தரவு என்று குறிப்பிட்டு பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளுமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் பாடசாலை அதிபர்களுக்கு பலர் கடிதங்களை அனுப்பி வைக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அரச அதிகாரிகளும்கூட இவ்வாறான கடிதங்களை அனுப்பி வைக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான எந்தவொரு கடிதத்தையும் அடிப்படையாக எடுக்கக்கூடாது. உரிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கமைவாக மாத்திரமே மாணவர்களை பாடசாலைகளுக்கு இணைத்துக்கொள்ள வேண்டும். இவற்றை மீறுகின்ற அதிபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார். (த)

# மழைக்கு வாய்ப்பு

மழையுடனான வானிலை நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் இருக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. சப்ரகமுவ, மத்திய, மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையுடனான வானிலை நாளை தொடக்கம் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் 2 மணிக்கு பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# ஞானசாரர் வழக்கிலிருந்து தலைமை நீதியரசர் விலகல்

கொழும்பு, செப். 17
நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞான சார தேரர் உள்ளிட்ட மூவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணைகளிலிருந்து தலைமை நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ் விலகியுள்ளார்.
இது குறித்த வழக்கு மேன்முறையீட்டுநீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்த போது, தனிப்பட்ட காரணங்களுக்காக வழக்கிலிருந்து விலகிக் கொள்கிறேன் என்று தலைமை நீதிபதி அறிவித்தார். இந்த வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து, இது பற்றிய விசாரணைகளை முன்னெடுக்க மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான மஹிந்த சமயவர்தன மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் கொண்ட நீதிபதிகள் குழாத்தை நியமித்துள்ளேன் என்றும் தலைமை நீதிபதி அறிவித்தார். (த)

# கப்பல் உரிமையாளரிடம் இழப்பீடு கோரும் இலங்கை

கொழும்பு, செப். 17
இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் தீ பிடித்த 'எம்.டி. நியூ டயமண்ட்' கப்பல் உரிமையாளர்களிடம் 340 மில்லியன் ரூபா இழப்பீட்டுக் கோரிக்கை ஒன்றை சட்டமா அதிபர் சமர்ப்பித்துள்ளார்.
கப்பலில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும், அதற்கு வழங்கிய ஒத்துழைப்புகளை சுட்டிக் காட்டியுமே சட்டமா அதிபர் தபுல டி லிவேராவின் ஒருங்கிணைப்பு அதிகாரி டயமண்ட் கப்பலின் உரிமையாளர்களின் சட்டத்தரணிகளிடம் சமர்ப்பித்துள்ளார்.
இதேவேளை இழப்பீட்டுத் தொகையை முழுமையாக செலுத்தும் வரை கப்பலை இலங்கை கடற்பரப்பிலிருந்து வெளியேற்றுவதற்கும் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதி வழங்க மறுத்துள்ளது. (த)

## மரண அறிவித்தல்



### மரியம்மா செலஸ்ரின்பிள்ளை


சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியம்மா செலஸ்ரின்பிள்ளை நேற்று (16.09.2020) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற செலஸ்ரின்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், றஞ்சிதமலர், வசிகரராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகிஸ்வரன், தயாபரி ஆகியோரின் அன்பு மாமியாரும், டினோஜினி- யேம்ஸ்குமார், டிக்சினி, கிசோனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிறண்டனின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (17.09.2020) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை தூய கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

**சில்லாலை, பண்டத்தரிப்பு,**
**தொடர்பு:076 347 8332**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### திருமதி சுப்ரமணியம் மகாலட்சுமி

சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்ரமணியம் மகாலட்சுமி நேற்று (16.09.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாராயணி, வள்ளியம்மை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் இளைய மருமகளும், காலஞ்சென்ற சுப்ரமணியத்தின் பாசமிகு மனைவியும், கோமேஸ்வரி, யோகநாதன், நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, பரமநாயகி, யோகேஸ்வரன், லோகநாயகி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரலிங்கம், மகேஸ்வரன் சிவானந்தராஜா திலகவதி, சிவானந்த ராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விஷ்ணுவர்த்தன் (ஜேர்மனி) மதனரூபி, கம்சத்வனி, டினேசன், மயூரேசன் ஆகியோரின் பேர்த்தியும், வரதரூபி, வரதசொரூபி ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்ற திருமதி சொக்கலிங்கம் நாகம்மா, திருமதி கிருஷ்ணப்பிள்ளை வள்ளியம்மை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருமதி. நமசிவாயம் மாரிமுத்து, கந்தையா, திருமதி சண்முகம் இராசம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2020) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 225 5811, 0777 431 620**

## மரண அறிவித்தல்



### பரமகுரு திருஞானசம்பந்தர்

**(ஓய்வு பெற்ற ப.நோ.கூ சங்க முகாமையாளர்-ஆவரங்கால்)**

ஆவரங்கால் மேற்கு புத்தூரை பிறப்பிடமாகவும், சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பரமகுரு திருஞானசம்பந்தர் (ஓய்வு பெற்ற ப.நோ.கூ சங்க முகாமையாளர்) நேற்று (16.09.2020) புதன்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான பரமகுரு-நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற பரமசாமி-சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் மங்களேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அமரர் விபிஷன், ஆரணி (M.S.O-உள்ளூராட்சி அமைச்சு) அவர்களின் பாசமிகு தந்தையாரும், பிரணவன் (வங்கி உத்தியோகத்தர்), அவர்களின் மாமனாரும், சுந்தரமூர்த்தி, வனிதாமணி (ஜேர்மன்), தவமணி (ஆவரங்கால்) பரமேஸ்வரி (பிரான்ஸ்) நாகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2020) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சரசாலை வடக்கு, சாவகச்சேரி**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## 13 ஒழிக்க ......

வடக்கு மாகாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள அவர்கள், காங்கேசன்துறையிலுள்ள தல்செவன விடுதியில் நேற்றுக் காலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, 13ஆவது திருத்தச் சட்டத்தை நாம் ஒருபோதும் ஒழிக்கமாட்டோம். அவ்வாறான எண்ணம் எமக்கில்லை. எதிர்வரும் ஜனவரி மாதம் மாகாணசபைத் தேர்தல் இடம்பெறும். மாகாணசபைகளைப் பலப்படுத்துவது தொடர்பிலேயே நாம் சிந்திக்கின்றோம். அரசிலுள்ள ஒரு சிலர் சொல்வதை அரசின் கருத்தாகக் கருத முடியாது. அமைச்சரவைப் பேச்சாளர்கள், மாகாணசபை ஒழிப்புத் தொடர்பில் ஏதாவது கருத்து தெரிவித்தார்களா? ஜனாதிபதி அல்லது பிரதமர் கருத்துத் தெரிவித்தனரா? எம்முடன் மாகாணசபை முறைமையைப் பலப்படுத்துவது தொடர்பில் பேசலாம். தனிநாடு தொடர்பில் பேச முடியாது என்றார்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் சசீந்திர, நான் மாகாண முதலமைச்சராக இருந்தவன். மாகாணசபை முறைமை தொடரவேண்டும். அதில் எந்த மாற்றமும் இல்லை. மாகாணசபை ஊடாக பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும், என்றார். (ம-ஓ,5)

## மாகாணசபை .....

ஒழிக்கும் முயற்சியில் இனவாதிகள் முழுவீச்சுடன் களமிறங்கியுள்ளனர். இதன் பின்னணியில் ராஜபக்ச அரசே இருக்கின்றது. எனவே மாகாணசபை முறைமையைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழ்க் கட்சிகள் ஒன்று திரளவேண்டும் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

மாகாணசபை முறை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளூராட்சி சபையொன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப்பகிர்வுக்கான ஒரு தளமாக மாகாணசபைகளே இருக்கின்றன. அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள் பகிரப்படாதபோதிலும் மாகாணசபைகளுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழர் பிரச்சினைக்காகவே மாகாணசபை முறைமை கூட உருவாக்கப்பட்டது.

தற்போது வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பறிப்பதற்கு இனவாதிகள் களமிறங்கியுள்ளனர். இதன்பின்னணியில் ராஜபக்ச அரசே செயற்படுகின்றது. தமிழ், முஸ்லிம் மக்கள் அடிமைகளாக வாழவேண்டும் என்பதே பேரினவாதிகளின் சிந்தனையாக இருக்கின்றது. இதற்கு இடமளிக்ககூடாது.

மாகாணசபை முறைமையை பாதுகாப்பதற்கு தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்றுபடவேண்டும். தெற்கிலுள்ள முற்போக்கு சக்திகளை நாம் ஒன்றுதிரட்டுவோம். ஜனநாயக விரோத பாதையில் பயணிக்க எத்தனிக்கும் இந்த அரசுக்கு கடிவாளம் போடவேண்டும் என்றார். (ம-ஓ,5,44)

## வெடுக்கு நாறி .....

நீதிமன்றில் நெடுங்கேணி பொலிஸார் கோரியிருந்தனர்.

இதனை நேற்றையதினம் ஆராய்ந்த நீதிபதி பொலிஸாரால் கோரப்பட்ட தடை உத்தரவு விண்ணப்பத்தை நிராகரித்ததுடன், திருவிழா நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதியும் வழங்கியிருந்தார்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. இந்த நிலையில் திருவிழாவை தடுத்து நிறுத்தக்கோரி தொல்லியல் திணைக்களத்தால் நெடுங்கேணி பொலிஸாருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் ஆலய நிர்வாகத்தினரை நேற்று மாலை அழைத்த பொலிஸார் தொல்லியல் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தை காண்பித்து அதில் சில விடயங்களை குறிப்பிட்டு தொல்லியல் சார்ந்த இடங்களை சிரமதானம் செய்ய முடியாது எனவும் அது தொல்லியலுக்குரிய இடம் அங்கு செல்வதோ திருவிழா செய்வதனையோ தடை செய்யுமாறும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதற்கு விளக்கமளித்த ஆலய நிர்வாகத்தினர், எமக்கான வழக்கு நீதிமன்றத்தில் சென்று கொண்டிருக்கின்றது. எம்மை ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை செய்யுமாறு குறிப்பிட்டதோடு அபிவிருத்திகளை மாத்திரமே செய்ய முடியாது என நீதிமன்றம் அறிவுறுத்தியதாகப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெரிவித்தனர்.

இதனை ஏற்கமறுத்த பொலிஸ் பொறுப்பதிகாரி தொல்லியல் கூறிய கூற்றுக்கு இணங்கியே செயற்பட முடியும் என்றும் வவுனியா நீதிமன்றுக்கு வருகை தருமாறும் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தனர். இந்த நிலையில் நேற்றையதினம் வழக்கில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் தலைமையில் 15க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் முன்னிலையாகினர்.

வழக்கில் முன்னிலையான சட்டத்தரணி ந.காண்டீபன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது, தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுப்பிய கடிதத்தை சார்பாக வைத்து விழாக்கள் இடம்பெறும்போது தொல்பொருளியல் சாதனங்களுக்கு சேதம் விளைவித்துவிடும் என்றவகையில் தடை உத்தரவு பொலிஸாரால் கோரப்பட்டிருந்தது.

106 பிரிவின் கீழே பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் போது மட்டுமே பொலிஸார் அதனைக் கையாளமுடியும். ஆனால் அதற்கான எந்த சான்றுகளும் இல்லாமல் அவர்கள் இந்த விடயத்தில் தான்தோன்றித்தனமாகக் கையாண்டுள்ளனர். அந்தப் பிரிவின் ஏற்பாடுகளை நன்கு அறிந்திருந்தும் இவ்வாறானதொரு விண்ணப்பத்தைச் செய்து நிகழ்வை தடுப்பதற்கு பொலிஸார் முனைந்துள்ளனர். எனினும் நீதிமன்றம் அதை நிராகரித்துள்ளது என்றார். (ம-ஓ,5,110)

## தேர்தல் ஆணை ......

'20' ஆவது திருத்தச்சட்டவரைபு தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளையும், அவதானிப்புகளையும் முன்வைப்பதற்காக அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை பிரதமர் நியமித்திருந்தார்.

அந்தக்குழுவின் அறிக்கை நேற்றுமுன்தினம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்படி பரிந்துரை இடம்பெற்றுள்ளது.

அத்துடன், தேசிய கணக்காய்வு ஆணைக்குழுவை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும், அமைச்சர்கள், இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையை 19 இன் பிரகாரம் தக்கவைத்துக்கொள்ளுமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒருவர் இரட்டைக் குடியுரிமை கொண்டிருக்கக்கூடாது எனவும், நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுபவருக்கு அது பொருந்தக்கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

அவசர சட்டவரைபு முன்வைப்பதற்கான வாய்ப்பை நீக்குமாறும், சட்டவரைபொன்றை முன்வைத்தால் அதனை சவாலுக்குட்படுத்துவதற்கு மக்களுக்கு 14 நாள்கள் அவகாசம்வழங்கப்படவேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது. (த-44)

## ஐநாவுக்கு .....

குற்றச்சாட்டுக்களை அடியோடு நிராகரிக்கின்றோம். இலங்கை அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைபு குறித்த ஆணையாளரின் கருத்துக்கள் தேவையற்றவையாகும்' இவ்வாறு ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பதில் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி டயானி மெண்டிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 45ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாடாளுமன்றத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் அரசமைப்பின் 20ஆவது திருத்தம் குறித்து ஜனநாயக நடைமுறைகளின் பின்னர் விவாதங்கள் இடம்பெறும். இதன்போது இதனுடன் தொடர்புபட்ட அனைவரும் தங்கள் கருத்துக்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

இதன்காரணமாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் 20ஆவது திருத்தம் குறித்த கருத்து தேவையற்றது. அனுமானத்தின் அடிப்படையில் முன் தீர்ப்பை எவரும் வழங்கக்கூடாது. முன்னாள் இராணுவ சார்ஜன்ட்டுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு இலங்கை அரசமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது என்பதை இலங்கை அரசு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றது.

முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள போலியான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு நிராகரிக்கின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் நம்பகத்தன்மையை இலங்கை அரசு தொடர்ச்சியாக நிராகரித்து வந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறிப்பாக உள்நாட்டுப் போரின் இறுதித் தருணங்கள் குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு போன்ற உள்நாட்டுக் குழுக்கள் ஆராய்ந்துள்ளன. அந்தக் குழுக்களால் இந்த இராணுவ அதிகாரிகளுக்கு எதிராகக் குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் எவற்றையும் கண்டுபிடிக்கமுடியவில்லை என்பதை அரசு மீள வலியுறுத்த விரும்புகின்றது.

ஆகவே, குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் இல்லாததன் காரணமாக இந்தச் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான தொடர்ச்சியான போர்க்குற்றச்சாட்டுக்களும், மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் ஏற்றுக்கொள்ள முடியாதவை. இவை இயற்கை நீதிக்கொள்கைக்கு முரணாணவை என இலங்கை கருதுகின்றது.

ஐ.நா. தீர்மானத்திலிருந்து இலங்கை விலகியுள்ள போதிலும் இலங்கையின் அரசமைப்பு கட்டமைப்புக்குள் நல்லிணக்கம், பொறுப்புக்கூறுதல், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை அரசின் கொள்கைக்கு ஏற்ப உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட நடைமுறை மூலம் முன்னெடுப்பது குறித்து அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது' என்றார்.

இராணுவக் கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், அரசு ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். (ம-22)

## 5 மாதங்களின்.....

அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வீசிய அம்பன் புயலின் தாக்கத்தால் சுமார் 51.4 மில்லியன் ரூபா பெறுமதியான வாழைகள், தென்னைகள், பப்பாசி என்பன அழிவடைந்தன என்று மாவட்டச் செயலகம் கணக்கிட்டு இடர் முகாத்துவ அமைச்சுக்குச் சமர்ப்பித்திருந்தது. இதற்கான இழப்பீடுகள் உடனடியாக வழங்கப்படும் என ஓர் அமைச்சரும் தெரிவித்திருந்தார்.

ஆனால், இடர் முகாமைத்துவ அமைச்சோ வீடுகள், உடமைகள் சேதங்களுக்கான இழப்பீடே தம்மால் வழங்கப்படும் எனவும், இதனை மகாவலி விவசாய அமைச்சிடம் சமர்ப்பியுங்கள் எனவும் கூறி திருப்பி அனுப்பியது. இதனால் ஒரு மாதம் வீணாகியது. அதன் பின்னர் மகாவலி அபிவிருத்தி விவசாய அமைச்சுக்கு அனுப்பி அமைச்சரவை ஒப்புதலைப் பெற முயற்சிகள் இடம்பெற்றன.

அந்த அமைச்சும் ஆராய்ந்து இதற்கான ஒதுக்கீடு தமக்கான அமைச்சிலும் இல்லை எனக் கூறி கையை விரித்தது. அதனால் இரண்டாவது மாதமும் வீணாகியது.

அதையடுத்து தேர்தல் காலம் என்பதால் ஓர் அமைச்சர் அது தொடர்பில் அமைச்சரவையில் கேள்வி எழுப்பினார். இவ்வாறு கேள்வி எழுப்பிய அமைச்சரையே இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தைத் தயார் செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அமைச்சரும் பத்திரத்தைத் தயார் செய்து அதனை மொழிபெயர்த்து 55 பிரதியும் எடுத்து அமைச்சரவை அலுவலகத்திடம் சமர்ப்பித்தார். இறுதி அமைச்சரவையிலேனும் எடுத்துக்கொள்ளப்படும் என விவசாயிகள் நம்பினர். அதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது. ஏனெனில் குறித்த விடயம் அமைச்சரவையில் ஆராய்வுக்குக்கூட எடுத்துக்கொள்ளப்படவேயில்லை.

தற்போதய புதிய அமைச்சரவையின் 5ஆவது கூட்டம் நேற்று இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் இழப்பீட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அனுமதி கிடைத்துள்ளதால் அது வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ம-22)

## டெனீஸ் -விக்கி .....

யில் நேற்று நிறைவுக்கு வந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கனகஈஸ்வரன், வழக்கை சமரசமாக முடித்துக்கொள்வது தொடர்பில் மனுதாரர் டெனீஸ்வரன் இணங்கியுள்ளார் என்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். சமரசமாக முடித்துக் கொள்வது பற்றிப் பேசவுள்ளோம் என்று மன்றில் தெரிவித்தார். இதற்கு டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ மூன்று விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கில் இடைக்காலக் கட்டளை வழங்கப்பட்டதும் அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் விக்னேஸ்வரன் மேன்முறையீடு செய்திருந்தார். இன்னொரு எதிரியான திருமதி அனந்தி சசிதரனும் மேன்முறையீடு செய்துள்ளார். அந்த வழக்குகளை மீளப் பெறவேண்டும்.

நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையைச் செயற்படுத்தத் தவறியமைக்காக நீதிமன்றத்தில் மனவருத்தத்தை தெரிவிப்பதுடன், அமைச்சுப் பதவியிலிருந்து டெனீஸ்வரனை நீக்கியமை பிழை என்று மன்னிப்புக் கோரவேண்டும், வழக்குச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளை முன்வைத்தார். இதற்கு விக்னேஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி, வழக்கை மீளப் பெறுவது மற்றும் வழக்குச் செலவு விடயங்களை ஏற்கலாம் என்று கூறியதுடன் விக்னேஸ்வரன் மன்னிப்புக் கோரமாட்டார் என்றும் விசாரணைகளை முன்னெடுக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் விசாரணைகள் ஆரம்பமாகின. நேற்றைய தினம் இரண்டாம் நாள் விசாரணைகள் ஆரம்பமாகின. நீதியரசர்கள் முன்னிலையில் வழக்கு நேற்று மதியம் எடுக்கப்பட்டபோதே, விக்னேஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி கனகஈஸ்வரன், உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன்முறையீட்டு மனுவை மீளப் பெற்றுக்கொள்வதற்கு இணக்கம் தெரிவிப்பதாகத் தெரிவித்தார். டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, அதனை ஏற்றுக்கொள்வதுடன் ஏனைய நிபந்தனைகளை விலக்கிக்கொள்வதாகக் குறிப்பிட்டார். இதன் பின்னர் நீதியரசர்கள் இருவரும் சுமார் 10 நிமிடங்கள் வரையில் கலந்தாலோசித்து விட்டு வழக்கை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

**பின்னணி**

டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்றும் அவரை மீள அமைச்சராக உள்வாங்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதி வழங்கிய இடைக்காலக் கட்டளையைச் செயற்படுத்தத் தவறிவிட்டார் என்று சட்டத்தரணி டெனீஸ்வரன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றை நீதியரசர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக தாக்கல் செய்திருந்தார்.

பிரதான வழக்கில் சட்டத்தரணி டெனிஸ்வரன் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை தவறானது என்று வட மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி தீர்ப்பளித்தது. இடைக்காலக் கட்டளையை செயற்படுத்த நீதியரசர் விக்கினேஸ்வரன் தவறிவிட்டார் என்ற நீதிமன்ற அவமதிப்பு வழக்கே நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

(ம-ஒ.5)

## சிவாஜி .....

கே.சிவாஜிலிங்கம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். அவருடன் கைது செய்யப்பட்ட, வாடகைக்கு அமர்த்தப்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதியும் பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு எதிர்வரும் 25ஆம் திகதிக்கு, அதாவது திலீபனின் இறுதிநாள் நினைவேந்தலுக்கு முதல்நாள் வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

'உங்களுக்கு நீதிமன்ற தடை உத்தரவு கிடைக்கவில்லை என்று மன்றுரைக்கப்பட்டுள்ளது. நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட உயர் பதவிகளை வகித்தவர். அவ்வாறு இருக்கையில் இந்த விவரத்தை அறிந்திருக்காமல் இருக்க முடியாது. சட்டத்தின் படியே நீதிமன்றக் கட்டளைகள் இயற்றப்படுகின்றன. அது எல்லோருக்கும் சமம். இனி இவ்வாறு நடக்கக்கூடாது' என்று யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.பீற்றர்போல் பிணைக் கட்டளை வழங்கினார். இதனையடுத்து 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் சிவாஜிலிங்கம் விடுவிக்கப்பட்டார். தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரத்தின் முதல் நாளான நேற்றுமுன்தினம் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராயில் நினைவேந்தல் நிகழ்வை செய்திருந்தார். அதனை அறிந்த கோப்பாய் பொலிஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து சிவாஜிலிங்கத்தையும் அவருக்கு வாடகைக்கு முச்சக்கர வண்டியைச் செலுத்திய சாரதியையும் கைது செய்தனர். இருவரையும் தடுத்து வைத்திருந்த பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரான லெப்டின் கேணல் திலீபனை நீதிமன்றத் தடை உத்தரவை மீறி நினைவுகூர்ந்த குற்றச்சாட்டின் கீழ் இருவருக்கும் எதிராக மன்றில் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

சந்தேக நபர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணிகள் என்.சிறீகாந்தா, வி.திருக்குமரன் உள்ளிட்ட 8 சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகினர்.

'இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளால் லெப். கேணல் பதவி வழங்கப்பட்ட திலீபனுக்கு முதலாவது சந்தேகநபர் சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்தியுள்ளார். அதற்கு இரண்டாவது சந்தேகநபர் உடந்தையாக இருந்துள்ளார்.

திலீபனுக்கு நினைவேந்தல் செய்வதற்கு இந்த நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு முதலாவது சந்தேகநபரின் மனைவியிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டது. அந்த தடை உத்தரவை மீறி அவர் இந்த நினைவேந்தல் நிகழ்வை நடத்தியுள்ளார்.

அத்துடன் நினைவேந்தல் நிகழ்வில் சந்தேகநபர்களால் பயன்படுத்தபட்ட பனரில் ஈழம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அது இலங்கையிலிருந்து பிரிக்க முற்படும் நாட்டைக் குறிக்கும். எனவே நீதிமன்றத் தடையை மீறி மேலும் பலர் அஞ்சலி நிகழ்வை நடத்த உள்ளதால் சந்தேகநபர்கள் இருவரையும் பிணையில் செல்ல அனுமதிக்காது 14 நாள்கள் விளக்கமறியல் உத்தரவை மன்று வழங்க வேண்டும்' என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

'நீதிமன்ற தடை உத்தரவு பிரதிவாதியிடம் ஒப்படைக்கப்படவேண்டும். எனினும் அவரது மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர். சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பிரதிவாதியின் மனைவி உள்ளிட்ட உறவினர்களிடம் ஒப்படைப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே சந்தேக நபர் தெரியும் வகையிலாவது நீதிமன்றத் தடையை பொலிஸார் ஒட்டியிருக்கவேண்டும். அதனால் சந்தேகநபர் நீதிமன்றத் தடை உத்தரவை மீறவில்லை. ஏனைய விடயங்களுக்குச் செல்ல நாம் விரும்பவில்லை.

மேலும் ஈழம் என்ற சொல்லு தமிழர் பகுதிகளைக் குறிக்கிறது. அதில் தவறில்லை. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) 30 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டில் பதிவு செய்த கட்சியாக உள்ளது. அதன் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி வகித்துள்ளனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபிடிபி) பொதுச் செயலர் அரசில் அங்கம் வகித்து தற்போது அமைச்சராகவும் பதவி வகிக்கின்றார். எனவே ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தியமை தவறில்லை' என்று மூத்த சட்டத்தரணி என்.சிறீகாந்தா மன்றுரைத்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்து பிணைக் கட்டளை பிற்பகல் 1.45 மணிக்கு வழங்கப்பட்டது.

(மஒ.5.26)

## யாழ் வாசிக்கு .....

சீட்டிழுக்கப்பட்ட மஹஜனசம்பத் ரிக்கெட் மூலமாகவே அவருக்கு மேற்படி தொகை கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2013ஆம் ஆண்டும் இதே பகுதியில் மஹஜன சம்பத் ரிக்கெட் மூலமாக 3.8 கோடி ரூபா வெல்லப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (து)

## 20க்கான பொறுப்பை.......

என எதிரணிகளும், சிவில் அமைப்புகளும் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக கேள்விகளை எழுப்பிவந்தன. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார்.

**கட்சிக்குள் மோதல்**
**இழுபறியில் '20'**

இதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைபில் மேற்கொள்ளப்படவேண்டிய திருத்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக பிரதமரால் நியமிக்கப்பட்ட ஆளுங்கட்சி குழுவின் அறிக்கை நேற்று அமைச்சரவையில் முன்வைக்கப்படவில்லை.

அமைச்சரும், ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார நேற்று இதை உறுதிப்படுத்தினார்.

'20' தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. எனவே தரமான, சிறப்பான '20' ஐ முன்வைப்பதே தமது பிரதான நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசமைப்பின் உத்தேச 20ஆவது திருத்தச்சட்டமூலத்திலுள்ள சில சரத்துகள் தொடர்பில் ஆளுங்கட்சிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.


அரசுக்கு சார்பான அமைப்புகளும் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இந்தநிலையில் இவை தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் ஆளுங்கட்சி உறுப்பினர்களடங்கிய குழுவொன்று பிரதமரால் நியமிக்கப்பட்டது. '20' தொடர்பில் விரிவாக ஆராய்ந்த மேற்படி குழு தனது அறிக்கையை நேற்றுமுன்தினம் பிரதமரிடம் கையளித்தது. அது அமைச்சரவையில் நேற்று முன்வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தபோதும் முன்வைக்கப்படவில்லை.

அதேவேளை, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு, அமைச்சர்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் 19 இன் பிரகாரமே தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்று அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(து-44)

# ட்ரம்ப் முன்னிலையில் அமைதி ஒப்பந்தம்



வொஷிங்டன், செப்.17

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்னிலையில் இஸ்ரேல், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் பஹ்ரைன் நாடுகளுக்கிடையேயான அமைதி ஒப்பந்தம் வெள்ளைமாளிகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாஹு, ஐக்கிய அரபு வெளியுறவுத்துறை அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் சயாத் மற்றும் பஹ்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல்லாடிப் அல் சாயனி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தம் சர்வதேச அரசியலில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் இஸ்ரேல் உடன் ஒப்பந்தம் செய்யும் 3 மற்றும் 4ஆவது இஸ்லாமிய நாடுகளாக ஐக்கிய அமீரகம் மற்றும் பஹ்ரைன் இடம்பிடித்துள்ளன. (வ-இ)



# அசர வைக்கும் மெஸ்ஸியின் வருமானம்

கொழும்பு, செப்.17
2020 ஆம் ஆண்டின் அதிக வருமானம் ஈட்டிய கால்பந்து வீரர்களுக்கான ஃபோர்ப்ஸ் இதழின் பட்டியலில், பார்சிலோனா வீரர் லியோனல் மெஸ்ஸி முதலிடத்தில் உள்ளார்.
மெஸ்ஸியின் ஆண்டு வருவாய் 126 மில்லியன் அமெரிக்க டொலராகும். இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோவுள்ளார். அவரது ஆண்டு வருவாய் 117 மில்லியன் அமெரிக்க டொலராகும். இந்தப் பட்டியலில் நெய்மர் மூன்றாவது இடத்திலும், கிலியான் எம்பாப்பே நான்காவது இடத்திலும் உள்ளனர். (எ)

# கால்பந்தாட்ட முடிவுகள்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக், மறைந்த நடுவர்கள் ஞாபகார்த்தமாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட போட்டிகள் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
முதலாவது காலிறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து சென் லூட்ஸ் அணி மோதியது. இதில் விண்மீன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
இரண்டாவது காலிறுதியில் சென்.மேரிஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. ஆட்ட நேரத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடிய வில்லை. இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.
அதில் சென்.மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
மூன்றாவது காலிறுதியில் சென்நீக்களஸ் அணியை எதிர்த்து ஐயனார் அணி மோதியது. இதில் சென்.நீக்களஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
நான்காவது அரையிறுதியாட்டத்தில் யங் கென்றீஸ் அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி மோதியது. அதில் யங்கென்றீஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (எ-422)



# டோனி பாணியே எனது வழியும்!

## மில்லர் கூறுகிறார்

லண்டன், செப்.17
இந்திய கிரிக்கெட் அணியின் சிறந்த கிரிக்கெட் வீரரான மஹேந்திர சிங் தோனியைப் போன்று போட்டியை வெற்றியுடன் முடிக்க நானும் விரும்புகிறேன் என தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்க அணியின் இடது கை அதிரடி துடுப்பாட்ட வீரரான டேவிட் மில்லர், கடந்த 8 ஆண்டுகளாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்காக விளையாடி வந்தார். இந்த சீசனில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக விளையாடவுள்ளார். தோனி சிறந்த ஆட்டத்தை முடிக்கும் வீரராக இருப்பதுபோல் நானும் இருக்க விரும்புகிறேன் என்று டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தோனி அவரது வேலையை எப்படி செய்து முடிக்கிறாரோ அதே வழியில் நானும் செல்ல விரும்புகிறேன். அவர் அமைதியாக இருப்பது, அவர் எப்போதும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறார் என்று நினைக்கத் தோன்றும்.
அவர் தன்னை சித்திரிக்கும் விதம் மிகவும் சிறந்தது. அவரைப் போன்று நானும் விரும்பி செயல்படுவேன். அதே உத்வேகத்தை வெளிப்படுத்த முயற்சி செய்வேன். டோனி அவருடைய பலம் மற்றும் பலவீனத்தை தெரிந்து வைத்து அதற்கு ஏற்பச் செயற்படுகிறார். நானும் அதைப் பயன்படுத்துவேன். அவரைப் போன்று துடுப்பெடுத்தாட வேண்டும் என்பதை விட, அவரின் சில துரத்தல்களைக் கண்டுவியப்படைகிறேன். அவரைப் போன்று போட்டியை நிறைவு செய்ய வேண்டும் என விரும்புகிறேன்- என்றார். (எ)

**விற்பனைக்கு**
பாவித்த Laptops விற்பனைக்கு உள்ளது.
Thinkpad, Dell மற்றும் HP
077 717 2325

**வேலைவாய்ப்பு**
யாழ் வடமராட்சியில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு கம்பியூட்டர் ரைப்செற்றிங் செய்யக்கூடியவர்கள் தேவை. (பெண்பிள்ளைகள் விரும்பத்தக்கது)
ஓவ்செற் மெஷின் மைண்டர் (Hamada)
தொடர்புகளிற்கு : 077 8329477

காலபந்து போட்டி:

# கலைமதி, இமையாணன் கழகங்கள் இறுதி ஆட்டத்துக்கு தகுதி

கரணவாய் செப் 17
கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில், நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும், இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகமும் இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றன. இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள், நேற்றுமுன்தினம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.
முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும், வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.
பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலத்த போராட்டத்தின் பின், கலைமதி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற அரை யிறுதி யாட்டத்தில் இமையாணன் மத்திய அணியை எதிர்த்து, கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது. இதில் இமையாணன் மத்திய அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதிபெற்றது. (ற-108,422)



வயாவிளான் மத்திய கல்லூரியில் கிரிக்கெட் ஆடுகளத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வு அதிபர் வே.த.ஜயந் தன் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ற-இ)

# இன்றைய ஆட்டம்

வலிகாமம் லீக் மறைந்த உதைபந்தாட்ட நடுவர்கள் ஞாபகார்த்தமாக நடத்தும் கால்பந்தாட்ட தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் பிற்பகல் 4 மணிக்கு நாவாந்துறை சென்நீக்ளஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென் மேரிஸ் அணி மோதவுள்ளன. (எ-422)

**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
077 248 7774
A/L 2020 அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான...
மாபெரும் விசேட செயலமர்வு
8.30AM - 2.30PM
செப்ரம்பர் 19,20,21
ICT கணிதம்(7)
விவசாய விஞ்ஞானம் புவியியல்
ஊடகக்கல்வி
★ பாடப்பரப்புக்கள் அனைத்தும் துரித மீட்டல் செய்யப்படும்.
★ தனிப்பாட அனுமதிகளும் வழங்கப்படும்.
முற்பதிவுகளுக்கு:- 077 248 7774 / 021 221 7860

**பணிநிலை வெற்றிடம்**
யாழ் நகர் மத்தியில் உள்ள Medical Clinic க்கு தேவை.
★Pharmacist (மருந்தாளர்)-SLMC Registered
★Accounts Clerk / Accountant (கணக்கு உதவியாளர்/கணக்காளர்)
★Cashier (காசாளர்)
★Cleaning Person -Male (சுத்திகரிப்பாளர்-ஆண்)
★Matron (Qualified Nurse) - தாதிய பரிபாலகி
நேர்முகத் தேர்வு : 18.09.2020 (வெள்ளி) மதியம் 12.00 மணி
19.09.2020 (சனி) மதியம் 12.00 மணி
இடம் : சன்றைஸ் மெடி கிளினிக் (யாழ் பஸ்நிலையம் முன்பாக) 388. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6069/ 070 6820 115 / 076 2555 529